பக்கங்கள்: பன்னிரண்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி12 சனிக்கிழமை (28-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:244

# எதிரணியினருடன் பேசும் திட்டத்தை கைவிட்டார் ஜனாதிபதி சந்திரிகா!

## அழைப்பை உதாசீனம் செய்ததால்

கொழும்பு,ஜூலை28

**கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் மற்றும் இன்றைய அரசியல் நிலைவரம் தொடர்பாக எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்த எடுத்த முயற்சியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தற்போது கைவிட்டு விட்டார் என்று நம்பகமாகத் தெரிய வருகிறது.**

**தற்போதைய நிலைமையில் ஜனாதிபதியின் அழைப்புக் குறித்து எதிர்க் கட்சிகள் ஆர்வம் காட்டாது - அவை உதாசீனம் செய்து வந்ததை அடுத்தே - அவர் தமது அழைப்புக்களை ரத்துச் செய்து விட்டார் என்று கொழும்புச் செய்தி வட்டாரங்களில் பேச்சடிபட்டது.**

ஐ.தே.கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, மலையக மக்கள் முன்னணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றுக்கு ஜனாதிபதி தம்மை சந்திக்க வருமாறு அடுத்தடுத்து அழைப்பு விடுத்திருந்தார்.

ஐ.தே.கட்சியை சந்திக்க நேற்று ஜனாதிபதி நேரம் ஒதுக்கியிருந்தார்.

அந்த அழைப்பை ஏற்று தமது கட்சியின் சார்பில் கட்சியின் தவிசாளர் சரித்த ரத்வத்த சந்திப்பில் கலந்து கொள்வார் என்று ஐ.தே.கட்சி ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தது.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவரும ஐ.தே.கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவையே தாம் சந்திக்க விரும்பியதாகவும் -

ஐ.தே.கட்சித் தவிசாளரை அல்ல எனவும் -

குறிப்பிட்டு ஐதே.கட்சியுடன் நேற்று நடத்த ஏற்பாடகியிருந்த தமது சந்திப்பை ஜனாதிபதி ரத்துக் செய்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்பு மாற்றத்தால் மலையக மக்களுக்கு பாதிப்பு

### ஜனாதிபதியிடம் தொண்டமான் எடுத்துரைப்பு

கொழும்பு,ஜூலை28

சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அரசமைப்பை மாற்றும்போது மலையக மக்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை குறையும் வாய்ப்பு உண்டு. எனவே தற்சமயம் நடைமுறையில் உள்ள விகிதாசார தேர்தல் முறையை மாற்றுவதை மலையக மக்கள் விரும்பவில்லை.

இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமான் மேற்கண்டவாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் பிரஸ்தாபித்துள்ளார்.

ஜனாதிபதியை நேற்றுக் காலை சந்தித்த சமயமே தொண்டமான் இப்படித் தெரிவித்துள்ளார் என அறிய வந்தது.

சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தற்போதுள்ள அரசமைப்பை மாற்றப் போவதாக அறிவித்துள்ளீர்கள். இந்த அரசமைப்பின்படி நடைமுறையில் உள்ள விகிதாசாரத் தேர்தலால் மலையக மக்கள் 9 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வாய்ப்பு உள்ளது. அரசமைப்பை மாற்றி தொகுதி அடிப்படையில் உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் தேர்தல் முறையைக் கொண்டுவந்தால் மலையக மக்களின் அங்கத்துவம் குறைந்துவிடும் என்று தொண்டமான் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கா சம்பவ விசாரணை துரிதமாக நடந்து வருகின்றதாம்

கொழும்பு,ஜூலை28

கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான தாக்குதல் பற்றிய விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தாக்குதல் தொடர்பான உண்மை நிலை விரைவில் வெளியிடப்படும்

இவ்வாறு பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு தெரிவித்தார்.

பொலீஸ் தலைமையகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டிலேயே பொலீஸ் மா அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இந்தத் தாக்குதல் விமானப்படையினருக்கு பெரும் பின்னடைவு தான் என்றாலும் விமானப்படையினர் துரிதமாக எடுத்த நடவடிக்கையால் தாக்குதலை முறியடிக்க முடிந்தது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் விமானப் படையைச் சேர்ந்த சிலர் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்; மேலும் பலர் விசாரிக்கப்படலாம்.

விரைவில் தாக்குதல் தொடர்பான உண்மை நிலை வெளியிடப்படும் - என்றார் அவர். (க-3-4)

## எலி பொறிக்குள் சிக்கிக்கொண்டது போல் யாழ்.மக்கள் ஈ.பி.டி.பியினரின் பிடிக்குள்!

### கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் மகேஸ்வரன் எம்.பி.

கொழும்பு,ஜூலை28

"யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பியினரின் அட்டகாசத்தால் பொதுமக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர். எலி பொறிக்குள் சிக்கிக்கொண்டது போன்று எமது மக்கள் இவர்களுடைய கெடுபிடிகளில் இருந்து மீள முடியாமல் இருக்கின்றனர். இந்த உண்மை நிலையை வெளி உலகுக்கு அம்பலப்படுத்த முடியாமல் உள்ளது. இதுதான் இன்றைய யாழ்.மக்களின் நிலைமை." - என்று கூறினார் ஐ.தே. கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன்.

நேற்றுக் காலை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் செய்தியாளர்கள் மாநாடு ஒன்றை அவர் நடத்தினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இறந்த ஒருவரின் சடலத்தை எடுத்துவருவது முதல் பிரயாண டிக்கட்டுக்கள் வாங்குதல், நியமனங்களைப் பெறுதல், வைத்திய சிகிச்சைகளைப் பெறுதல் என்று அனைத்து விடயங்களுக்கும் ஈ.பி.டி.பியினரின் தயவு தேவைப்படுகின்றது.

ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கா தாக்குதலில் உயிரிழந்த 13 பேரின் சடலங்களை புலிகளிடம் கையளிக்க ஏற்பாடு

கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மீதான தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் எனக் கருதப்படும் 13 பேரின் சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் விடுதலைப் புலிகளிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு பிரதிப் பொலீஸ் மா அதிபர் கிறிசேன ஹேரத் தெரிவித்தார் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

ஓரிரு தினங்களில் இந்தச் சடலங்கள் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டு விடும் என்றும் -

பிரஸ்தாப சடலங்கள் நேற்று முன்தினம் இரவு பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்றும் -

அந்தச் சடலங்கள் ராகம வைத்தியசாலையில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன என்றும் - அவர் மேலும் சொன்னார். (க-3-4)

## சபாநாயகர் வெளிநாடு பயணம்

கொழும்பு,ஜூலை28

அரசியல் நெருக்கடி நிலவி வரும் இவ்வேளையில் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு நேற்றுப் புறப்பட்டுச் சென்றார்.

ஹொங் ஹொங் சென்று அங்கிருந்து அமெரிக்காவுக்கு அவர் செல்வார் என்றும் அடுத்த மாதம் 21ஆம் திகதி சர்வஜன வாக்கெடுப்பு முடிந்த பின்னரே அவர் நாடு திரும்புவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-3)

## பொலீஸ் நிலையத்திற்கு அருகில் கான்ஸ்டபிள் சுட்டுக் கொலை

### வாழைச்சேனையில் பிஸ்ரல் குழு கைவரிசை

கொழும்பு,ஜூலை28

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் வாழைச்சேனைப் பொலீஸ் நிலையத்தில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் வைத்து பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பிஸ்ரல் குழுவால் சுட்டுக் கொல்லப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

வாழைச்சேனை பொலீஸ் நிலையத்திற்கு கடமைக்குச் சென்று கொண்டிருந்த வேளையிலேயே இவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் -

கொலையுண்டவர் எம்.ஏ.முஸ்தபா (வயது32)என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து ஓட்டமாவடி, மாவடிச்சேனைப் பகுதிகளில் படையினர் நேற்று சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.

அதேவேளை - பொலன்னறுவ மாவட்டத்தில் நிதன்வெல என்னும் இடத்தில் வயலுக்குப் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த ஊர்காவலர் ஒருவர் விடுதலைப் புலிகளின் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார் என்றும் விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (க-3-4)

## லண்டன் இலங்கை தூதரகம் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்!

லண்டன்,ஜூலை28

லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் மீது கடந்த புதன்கிழமை இனந்தெரியாத இருவர் பெற்றோல் குண்டை வீசித் தாக்கினர் என்றும் இதனால் பெரும் சேதம் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் குறித்து பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்போது தூதரகத்தின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

தூதரகத்தில் பொருத்தப்பட்டுள்ள மூடிய சுற்றுத் தொலைக்காட்சிப் பதிவுக்கருவியில் குண்டு வீசியதாகக் கருதப்படும் இருவரின் உருவங்கள் பதியப்பட்டுள்ளன என்றும் -

இதை வைத்து ஸ்கொட்லண்ட்யாட் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (க-3)

## விமானங்களுக்கு கட்டுப்பாடு

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தனியார்களுக்குச் சொந்தமான விமானங்களும் எரிபொருள் பெறுவதற்காக வரும் விமானங்களும் இறங்குவதற்கு அனுமதி வழங்குவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தாக்குதலில் சேதமடைந்த விமானங்களை அப்புறப்படுத்தும் பணிகள் முடிவடையவில்லை என்றும -

இதன்காரணமாக ஏற்பட்டுள்ள இடநெருக்கடியால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

## மணலாறில் இரு சம்பவங்களில் 3 படையினர் பலி; 9 பேர் காயம்

கொழும்பு,ஜூலை28

வெலிஓயாவில் (மணலாறில்) ஜானகபுரவுக்கு மேற்கே இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கோயில் முனை (டெம்பிள் பொயின்ட்) முகாம் மீது நேற்று அதிகாலை 3.30 மணியளவில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்தனர்; மூன்று படையினர் காயம் அடைந்தனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

சிறு ஆயுதங்கள் மற்றும் மோட்டார்களைப் பாவித்துத் தாக்குதலைப் படையினர் முறியடித்தனர் என்றும் -

பத்து நிமிடத் தாக்குதலுடன் புலிகள் பின்வாங்கினர் என்றும் - தகவல்நிலையம் மேலும் தெரிவித்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## சமயச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜுலை28

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரத ராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் வாரந்தோறும் இடம்பெறும் திவ்விய பிரபந்த உரைத்தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திவ்வியப் பிரபந்தவுரையாளர் கமாணிக் கவாசகர் 'ஆண்டாள் கண்ட கனவு' என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

(க-3)


## லக்ஷ்மி இணுவில்

அர்ஜுன் - அபிராமி நடிப்பில்

**பார்வையில்**

தினசரி 10.30, 2.30 (ப.நே.)

1-08-2001 முதல்

M.G.R இன்

**உரிமைக்குரல்** (ரீஸ்ஸ்)

(90542)

## தேவை

சமையல் செய்பவருக்கு கையுதவியாளர் தேவை.

தொடர்பு:-

**ஹோட்டல் றொலெக்ஸ்**

340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(90448)

## நாகம்ஸ் சுன்னாகம்

அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இன்று மட்டும்

சரத்குமார், மீனா, நடித்த இனிய பாடல்கள் நிறைந்த

**மாயி** (ரீல்ஸ்)

காட்சிகள்:- 11.00, 2.30 (பு.நே.)

நாளை முதல்

**சிட்டிசன்**

(90484)

## ராஜா யாழ்ப்பாணம்

விஜயகாந்த், சாக்ஷி, பிரகாஷ்ராஜ், ரம்யாகிருஷ்ணன், நாசர் மற்றும் பலர் நடிப்பில

**வாஞ்சிநாதன்**

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)

சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)

அடுத்த வெளியீடு:-

**பிரண்ட்ஸ்**

(C/17443)

## தேவை

கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆள் தேவை

★ காசாளர்

★ களஞ்சியப்பொறுப்பாளர்

★ சிட்டை லிகிதர்.

கல்வித்தகைமை க.பொ.த. உயர்தரம் உள்ளவர்களும், அனுபவத்தில் மூன்று வருடத்திற்குக் குறையாதவர்களும், 25 வயது தொடக்கம் 40 வயதுக்குட்பட்டவர்களும் 01.08.2001 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**குறிப்பு:** யாழ்.மாநகரசபை எல்லைக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

ஸ்ரீ முத்துமாரி அம்மன் றேடர்ஸ்,
இல.171, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(90523)


## கண்ணீர் அஞ்சலி

எமது வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் வடிசாலையில் இரவு நேர அமையக் காவலாளியாகப் பணிபுரிந்த

அமரர் **வைரமுத்து வரப்பிரசிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்திஅடையப் பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
வலிகாமம். ப.தெ.வ.அ.கூ.
சங்கங்களின் கொத்தணி.

(C/17609)

## பிறந்த நாள் வாழ்த்து



28-07-2001

இன்று பிறந்த நாளைக் கொண்டாடும்

**திரு.சி.ராஜ்குமார்** (ராஜ்)

(உரிமையாளர், ஹரிஹரன் பிறின்டேர்ஸ்)

அவர்களைப் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என மனதார வாழ்த்துகின்றோம்.

84, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (90530) - நண்பர்கள்.

உ



தொல்புரம் - வழக்கம்பரை

## முத்துமாரி அம்மன் தேவஸ்தான

# சங்காபிஷேக பெருவிழா

அம்பிகை அடியார்களே!

இலங்காபுரியின் வடபால் யாழ்ப்பாண நன்னகருக்கு மேற்கே தொல்புரம் வழக்கம்பரைப் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலித்துவரும் அம்பாளுக்கு கும்பாபிஷேக மண்டல நிறைவு மஞ்சன சங்காபிஷேகப் பெருவிழா நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆடித் திங்கள் 12ஆம் நாள் இன்று (28.07.2001) சனிக்கிழமை காலை 7.00 மணி முதல் நடைபெற அம்பாளின் திருவருள் கைகூடியுள்ளது.

மாலை 4.00 மணி முதல் விஷேட பூஜைகளுடன் திருவூஞ்சல் நடைபெற்று, அம்பாள் பூந்தண்டிகையில் எழுந்தருளி திருவீதியுலா வந்து அருள்பாலிப்பார். அம்பாள் அடியார்கள் இப்பெருவிழாவில் கலந்து அம்பாளின் திருவருள்பெற்று நண்பகல் நடைபெறவுள்ள அன்னதான நிகழ்விலும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

✦ விசேட மேளக்கச்சேரி ✦

1. **கண்ணன் குழுவினர்** (சித்தன்கேணி)
2. 'நாதஸ்வர இளவரசன்' **இ.சிவகுமார் குழுவினர்** (தொல்புரம்)

✦ கௌரவிப்பு நிகழ்வு ✦

1. அம்பாளின் கும்பாபிஷேக, மண்டலாபிஷேகக் கிரியைகளைத் தொடர்ந்து திறம்பட நடத்திய கும்பாபிஷேகப் பிரதம குரு **சிவப்பிரம்மஸ்ரீ ச.மு.பாஸ்கரக்குருக்கள்** (ரவிக்குருக்கள்)
2. தேவஸ்தான குரு: **சிவஸ்ரீ சு.சுந்தரராஜக் குருக்கள்**
3. தேவஸ்தானத் திருப்பணிக்கு அயராது பாடுபட்ட **உயர்திரு.ந.திரிலோகநாதன் J.P.U.M.** (தலைவர், வலி.மேற்கு பிரதேச சபை)
4. பஞ்சதள இராஜகோபுர அமைப்பாளர் **'சிற்பாசாரியார்'** அராலியூர் **திரு.வே.யோகேஸ்வரன்**

✦ மாலை நிகழ்ச்சிகள் ✦

அருளுரை: அமெரிக்க சுவாமிஜீ **ஸ்ரீமத் தந்திரதேவ மகாராஜ்** அவர்கள்

வில்லிசை: **"வில்லிசைப் புலவர்" "கலாபூஷணம்" "கலாவிநோதன்"**

**க.நா.கணபதிப்பிள்ளை** (சின்னமணி) குழுவினரின்

**"பார்வதி கல்யாணம்"**

அடியார்கள் பால், தயிர், இளநீர், பூஜைத் திரவியங்கள் ஆகியவற்றை வழங்கி அம்பாளின் அருளைப் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C/17606) - தேவஸ்தான பரிபாலன சபை.

உ

## தசாக கிருகயக்ஞ அழைப்பு

விஷு வருஷம் ஆடி மாதம் 3ஆம் திகதி (2001-7-19) வியாழக்கிழமை சிவபதம் அடைந்த

**ஸ்ரீமதி க.சந்தானலட்சுமி அம்மா**

அவர்களது உத்தரக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

*தசாகம்:* ஆடி மாதம் 12ஆம் திகதி (2001-07-28) சனிக்கிழமை காலை 9.00 மணி

*கிருகயக்ஞம்:-* ஆடி மாதம் 15ஆம் திகதி (2001-07-31) செவ்வாய்க்கிழமை நண்பகல் 11.00 மணி

மேற்படி கிரியைகளிலும் எதிர்வரும் (2001.07.31) செவ்வாய்க்கிழமை நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*காசிவிநாயகர் தேவஸ்தானம், தெல்லிப்பழை.* சிவஸ்ரீ சி.கணேசலிங்கக் குருக்கள்

(90532)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையில் தரம் 5இல் கல்வி கற்கும் மாணவனாகிய

**செல்வன் மகேந்திரம் சுகாநந்தன்**

அவர்கள் 23-06-2001 சனிக்கிழமை அன்று காலமான செய்தி கேட்டு கவலையடைகின்றோம். மறைவினால் ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நாமும் துயரில் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/புத்தூர் மெ.மி.த.க.பாடசாலைச் சமூகம்,
புத்தூர்.

(90526)

## திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

# கலை நிலா அரங்கு

(மாதாந்த அரங்கு நிகழ்வு)

காலம்:- நாளை (29-07-2001) ஞாயிற்றுக்கிழமை

நேரம்:- மாலை 6.15 மணி

இடம்:- மன்ற அரங்கு

**நிகழ்ச்சிகள்**

☆ நடனங்கள் ☆ வசந்தன் ஆட்டம்

☆ வாய்ப்பாட்டு ☆ வாத்திய இசை நிகழ்வு

**சிறப்பு நிகழ்ச்சி**

**விடலைக் குமுறல்**

(நாடகம்)

**பிரவேசம் இலவசம்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 - 2393

-திருமறைக் கலாமன்றம்.

(C/17605)

# மரண அறிவித்தல்கள்

## தெட்சணாமூர்த்தி சிவமூர்த்தி

(ஓய்வுபெற்ற அஞ்சல் அதிபர்)

நல்லூர் குமாரவீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அஞ்சல் அதிபர் தெட்சணாமூர்த்தி சிவமூர்த்தி 26.07.2001 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு தனது எண்பத்தாறாவது அகவையில் அமரர் உலகம் புகுந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தெட்சணாமூர்த்தி - கனகாம்பிகை அம்மா தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் கமலபூரணம் ஆகியோரின் கைப்பிடி நாயகனும் சுந்தரமூர்த்தி (ஓய்வுபெற்ற சிரேஷ்ட வரிமதிப்பாளர், இறைவரி திணைக்களம்; தற்சமயம் தென்ஆபிரிக்கா), காலஞ்சென்றவர்களான சொர்ணலெட்சுமி, கனகம்மா ஆகியோரின் பாசமிகு உடன்பிறப்பும் காலஞ்சென்றவர்களான திருமதி சுந்தரமூர்த்தி சிவகாமசுந்தரி, பஞ்சாட்சரம் (ஓய்வுபெற்ற உதவி அத்தியட்சகர், தொலைத் தொடர்பு நிலையம்), அருளம்பலம் (சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 27.07.2001 வெள்ளிக்கிழமை பி.ப. 4.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

37, குமார வீதி,
நல்லூர்.

தகவல்:
சி.கமலபூரணம் (மனைவி)

(90451)

## சரவணமுத்து அருணாசலம்

(ஓய்வுபெற்ற சாவகச்சேரி ப.நோ.கூ.சங்க ஊழியர்)

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் இமையாணன் கிழக்கு உடுப்பிட்டியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து அருணாசலம் நேற்று (27.07.2001) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2001) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.சரவணபவாநந்தன்
(மகன் - இ.போ.ச.சாரதி, பருத்தித்துறை)

(C/17610)

# உதயன்

## பிரிட்டனின் போக்கு

கட்டுநாயக்கா விமானத் தளத்தின் மீதான புலிகளின் தாக்குதலை அடுத்து இலங்கை விடயம் குறித்து பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜக் ஸ்ட்ரோ அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

''தற்போது இலங்கையில் காணப்படும் உள்நாட்டு மோதல் எம்மை மிகவும் அக்கறை கொள்ள வைத்துள்ளது. இலங்கை அரசாங்கமும் புலிகள் இயக்கமும் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி, சமாதானப் பேச்சு மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். பேச்சு மூலம் காணப்படும் தீர்வே நீண்ட காலம் நிலைக்கக் கூடியதாக இருக்கும்.

''இனப்பிரச்சினைத்தீர்வுக்கு பிரிட்டன் எந்த வகையிலாவது உதவ முடியுமானால் அதற்குத் தயாராக இருக்கின்றது என்பதைச் சம்பந்தப்பட்ட சகலருக்கும் தெரிவிக்க விரும்புகின்றோம்.'' — என்று அவர் கூறியிருக்கின்றார்.

அவரின் இந்த பாசாங்குப் பேச்சைக் கேட்டு அழுவதா சிரிப்பதா என்று தெரியாத நிலையில் ஈழத் தமிழர் உள்ளனர்.

இலங்கை இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட முக்கிய தரப்பினர் இருவர்.

ஒரு தரப்பு —அரசு. மற்றைய தரப்பு—விடுதலைப் புலிகள்.

தாங்களும் கூடத் தமிழரின் பிரதிநிதிகள்தான் என்றும், எனவே தீர்வுக்கான இணக்கம் தங்களுடனும் சேர்த்துத்தான் காணப்பட வேண்டும் என்றும் பல தமிழ்க் குழுக்களும் கட்சிகளும் கூறிக்கொண்டாலும் கூட, நிரந்தரத் தீர்வு எட்ட வேண்டுமானால் இணக்கம் விடுதலைப் புலிகளுடன்தான் காணப்பட வேண்டும் என்பதே யதார்த்தம்.

இலங்கையில் தனித்திருந்த தமிழ்அரசை சிங்களப் பேரினவாதிகளின் கீழ் ஒன்று சேரும் நிலையை உருவாக்கியதில் பிரிட்டனின் காலனித்துவ ஆட்சிக்குப் பெரும் பங்குண்டு. அந்த வகையில் இங்கு இனப்பிரச்சினை உருவாகுவதற்கு வித்திட்டவர்களே பிரிட்டிஷ்காரர்கள்தான்.

எனவே இப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதில் உதவுவதும், அப்பணியில் முன்னிற்பதும் அவர்களது பொறுப்பும் கடமையுமாகும்.

இந்தவகையில் அந்தப் பொறுப்பை — கடமையை — நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட இரு தரப்புக்கும் இடையில் நடுநிலையாளராக — மத்தியஸ்தராக — ஏற்பாட்டாளராக — பங்குபணியாற்றக்கூடிய தார்மீகக் கடப்பாடும் உரிமையும் கூட பிரிட்டனுக்கு உள்ளது.

அத்தகைய தார்மீகக் கடமையை நிறைவேற்றும் பொறுப்பு இருப்பதால் இரு தரப்புக்கும் இடையில் மத்தியஸ்தம் பேணக்கூடிய வகையில் தனது தகைமையை பிரிட்டன்தொடர்ந்து பேண வேண்டும் என இலங்கைத் தமிழர் தரப்பு தொடர்ந்து குரலெழுப்பி வந்தது. ஆனால் அக்குரல் செவிடன் காதில் ஊதிய சங்கு போலாயிற்று.

ஈழத் தமிழரின் நலனைக் கவனத்தில் எடுக்காது — ஸ்ரீலங்கா அரசுத் தரப்பின் வற்புறுத்தலுக்கு இணங்க — புலிகள் அமைப்பை பயங்கரவாத இயக்கமாக — தடை செய்யப்பட்ட குழுவாக — பிரிட்டன் அறிவித்தது.

இப்போது இலங்கை இனப் பிரச்சினை விடயத்தில் அக்கறை உள்ளது போலவும், தீர்வுக்கு உதவத் தயார் என்றும் பிரிட்டன்பகிரங்கமாகக் கூறுவது பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டும்செயலேயன்றி வேறில்லை.

## பிரதேச சாகித்திய விழா போட்டிகள் நெடுந்தீவில்

யாழ்ப்பாணம், ஜூலை 28

நெடுந்தீவுஉதவி அரசாங்க அதிபர் பணிமனை நடத்தும் பிரதேச சாகித்திய விழா தொடர்பான போட்டிகள் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

நெடுந்தீவுப் பகுதியில்உள்ள பாடசாலைகள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், இளைஞர்கள், யுவதிகள் இந்தப் போட்டிகளில் பங்குபற்றுவர்.

கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், ஓவியம், நடனம் ஆகிய போட்டிகளில் பங்குபற்ற விண்ணப்பித்தவர்களை அன்றையதினம் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகத்தின் வழிப்படுத்தலில் நெடுந்தீவுக்கான கலாசார உத்தியோகத்தர் இந்தப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

(ம-7)

## நாட்டு நடப்பு

நல்லூரான் வீதித் தேரும்
நயினையாள் தந்த அமுதும்
வல்ல சந்நிதியான் மடத்தில்
வயிறார உண்ட சோறும்
மெல்லவே வல்லிபுரத்தான் தேரை
மெதுவாக இழுத்த நாளும்
எல்லாமே ஒன்று சேர்ந்து
ஏரம்பர் மனதை வாட்ட
அல்லும் பகலும் எண்ணி
அழுகின்றார் கனடா நாட்டில்.

— விகடகவி —

## மாநகர சபை சுகாதாரக் குழு புதிய தலைவர்

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். மாநகரசபை சுகாதாரக் குழுவின் புதிய தலைவராக மாநகரசபை உறுப்பினர் ம. மங்களநேசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்திலேயே இவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

முன்னர் சுகாதாரக் குழுத் தலைவராக இருந்த செல்லையா விஜயரட்ணம் அண்மையில் தமது பதவியை இராஜினாமாச் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-4)

## வடக்கு - கிழக்குப் பகுதிக்கு வெளியே தாக்குதல்கள் அதிகரிக்கும் அச்சம்

கொழும்பு, ஜூலை 28

கட்டுநாயக்காவிமானநிலையம் மற்றும் விமானப்படைத் தளம் மீதான புலிகளின் தாக்குதலானது வடக்கு — கிழக்கிற்கு வெளியே அவர்களது பாரிய தாக்குதல்கள் மீண்டும் அதிகரிக்கப்போகின்றதென்பதைத் தெளிவுபடுத்தியுள்ளதாக இராணுவ அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் முதலாம் திகதி வன்னியில் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்திய பின் கடந்த எட்டு மாதங்களாக புலிகள்வடக்கு —கிழக்கிற்கு வெளியே தாக்குதல் எதனையும் நடத்தவில்லை.

அதேநேரம் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி முதல் இவ்வருடம் ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி வரை புலிகள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் அறிவித்திருந்தனர்.

இந்த யுத்த நிறுத்தத்தை அவர்கள் கைவிட்ட பின்னரும் கடந்த மூன்று மாதங்களாக வடக்கு — கிழக்கிற்குள்ளேயே தாக்குதல் நடத்தி வந்தனரே தவிர அதற்கு வெளியே தாக்குதல் எதிலும் ஈடுபடவில்லை.

இந்த நிலையில் அண்மையில் விமானப் படைக் குண்டு வீச்சு விமானங்கள் வடக்கில் 48 மணிநேரம் நடத்திய கடுமையான விமானத் தாக்குதலால் சீற்றமடைந்த புலிகள் இதுகுறித்துக் கடும் எச்சரிக்கையும் விடுத்திருந்தனர்.

எனினும் கடந்த செவ்வாய்க்கிழமை கட்டுநாயக்காவில் நடைபெற்ற தாக்குதலானது இதுவரை காலத்தில் வடக்கு—கிழக்கிற்கு வெளியே அதுவும் கொழும்பின் சுற்றுப்புறங்களில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரும் தாக்குதலாகும்.

இதேவேளை —

இந்தத் தாக்குதலானது வடக்கு—கிழக்கிற்குவெளியே மேலும் பல தாக்குதல்கள் இடம்பெறப்போகின்றன என்பதைச்சுட்டிக் காட்டியுள்ளதாகத் தெரிவித்த பாதுகாப்பு அதிகாரியொருவர், செவ்வாய்க்கிழமைத் தாக்குதலானது சமாதான முயற்சிகளைத் தடம்புரளச் செய்யுமெனத் தான் நினைக்கவில்லை எனவும் கூறினார்.

வடக்கில்நடைபெற்ற விமானத் தாக்குதலுடன் கடந்த வாரம் முல்லைத் தீவுப் பகுதியில் இடம்பெற்ற விமானத் தாக்குதலும் கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மீதான தாக்குதலுக்கு வழிவகுத்திருக்கலாமென இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேநேரம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தாக்குதலும் பதில் தாக்குதலும் தொடரும் சமாதான முயற்சிகளைப் பாதிக்காதென அரச அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

## உள்ளூராட்சிமன்றங்களுக்கான நூல்கொள்வனவு இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

உள்ளூராட்சி மன்றங்களுக்கான நூல் கொள்வனவு தற்காலிகமாக இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி அறிவித்துள்ளார்.

எனவே ஈழத்து எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களையும், நூல்களையும் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்துக்கு தபால் மூலமாகவோ, நேரிலோ அனுப்பி வைக்க வேண்டாமென்றும்— அவர் கேட்டுள்ளார்.

(ம-7)

## தீவக மாணவர்கள் நலன்கருதி அபிவிருத்திக் கழகம் உதயம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

தீவக மாணவர்களின் கல்வி வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்கும் நோக்குடன் தீவகக்கல்வி அபிவிருத்திக் கழகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தீவகத்தில் இயங்கும் 35 பாடசாலைகளின் அதிபர்களும், ஈ. பி. டி. பி. அமைப்பின் தீவக அலுவலகத்தில் ஒன்று கூடி இந்தக் கழகத்தை உருவாககியுள்ளனர்

இந்த நிகழ்வில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ந. மதனராஜனும் கலந்து கொண்டார்.

தீவகப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு ஒரு கோடியே 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் —

பாடசாலை அதிபர்கள் தமது திட்டங்களைச் சமர்ப்பிக்கும்படியும் — அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தக் கழகத்தின் பிரதி நிதிகளுக்கு அறிவித்துள்ளதாக ஈ. பி. டி. பியின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

(க-3)

## தெல்லிப்பழை கும்பளைகுளம் புனரமைக்கும் பணி ஆரம்பம்

தெல்லிப்பழை, கும்பளை குளம் புனரமைப்பு வேலைகள், பட்டினிக் கெதிரான நிறுவனத்தின் நிதி உதவியுடன் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளன.

விவசாயிகளின் நன்மை கருதி கும்பளை குளத்தை ஆழமாக்கி, மழை நீரைச் சேமித்து. விவசாய நிலங்களுக்கு வழங்கவுள்ளதாக தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி தி. பத்தினியம்மா தெரிவித்தார்.

இந்தக் குளத்தை ஆழமாக்கும். பணியில் மல்லாகம் விவசாய சம்மேளன உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளதாகவும்—

குளத்தை ஆழமாக்கும் பணிக்கு குறைந்தது ஒரு மாதகாலமாவது எடுக்கும் எனவும் தெல்லிப்பழை பிரதேச செயலர் தெரிவித்தார்.

கும்பளை குளபுனரமைப்பு வேலைகளின் ஆரம்ப வைபவத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலர், பட்டினிக் கெதிரான நிறுவன இயக்குநர், பிரதேச சபைத் தலைவர் உட்பட பலர் கலந்து கொண்டு அத்தப் பணியை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தனர். (க-6)

## அன்னதான மண்டபம் கட்டடப் பணிகள் பூர்த்தி

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத்தில் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வந்த அன்னதான மண்டபப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

வேலைகள் பூர்த்தி அடைந்ததைத் தொடர்ந்து அடுத்த மாத நடுப்பகுதியில் மண்டப திறப்பு விழாவை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(ம-86)

## நாளை

ஆடி 13

ஞாயிற்றுக்கிழமை

திதி:- நவமி

முற்பகல்:- 7.49 வரை.

நட்சத்திரம்:- விசாகம்

பிற்பகல்:- 2.03 வரை.

சுபநேரம்:- 9.03-10-33

ராகுகாலம்:- 4.33-6.03

(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பேசாத மனிதனிடமும், குரைக்காத நாயிடமும் எச்சரிக்கையாயிரு!

## கண்ணிகள் காத்திருக்கின்றன கவனம்!



பட்டம் இருந்தென்ன
பதவிதான் இருந்தென்ன
இட்டமுடன் இனிய
இல்லாள் இருந்தென்ன
கட்டழகு குன்ற
காலினை இழந்திடின்
கெட்டிடும் வாழ்வு
கேடுகள் சூழ்ந்திடும்!

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சிவ தொண்டன் சபையினரின் வெளியீட்டு நூல்கள்; பிள்ளையார் புராணம், சைவத் திருமுறைத்திரட்டு, திருவாசகம், தாயுமான சுவாமிகள் பாடல், நமச்சிவாய மாலை, நற்சிந்தனை இருக்கின்றன. தொடர்பு: 135,சிவன்கோயில் முன்பாக, நல்லூர், யாழ்ப்பாணம். (90503)

வேள்விக்கு வளர்க்கும் பெரிய இன ஜமுனாபாரி இரண்டு கடாக்குட்டிகளும், பால் தந்து கொண்டிருக்கும் தாயாடும், கோழிக்கூடுகளும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- சனி, ஞாயிறு 7, செட்டித்தெரு, நல்லூர். (90502)

Gold Fish மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- குட்டி, 40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (12 மணிக்குப் பின்பு தொடர்பு கொள்ளவும்). (90424)

நல்ல நிலையிலுள்ள M. D. 90 மொடல் 21 மோட்டார் சையிக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- S. S. நாதன், இல. 16/3, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (90455)

## கார் விற்பனைக்கு

இலக்கம் 6 ஸ்ரீ 3787 சுப்பர் மின்ஸ் கில்மன் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அ. இரவீந்திரதாசன், 18/4 (66), சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். (90492)

ஆசிரியரின் தனிப்பாவனையிலுள்ள 3ஸ்ரீ தொடர்இலக்கமுடைய VOLKS WAGON கார் விற்பனைக்குண்டு. தொடர்பு:- திரு. ம. புஸ்பராசா, 14, குறோஸெற் ஒழுங்கை, (கச்சேரி நல்லூர் றோட் அருகில்) நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம். (90500(

வொக்ஸ்வேகன் (9ஸ்ரீ 5394), பேர்ஜோ 404 (6ஸ்ரீ 3303), இரண்டு கார்களும் களும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ந. சுதர்சன், பிரதேச சபை ஒழுங்கை, மந்திகை. (90516)

பொறியியலாளர் ஒருவரின் சொந்தப் பாவனைக்கென்று முற்று முழுதாக மீளப் புனரமைக்கப்பட்ட, ஒஸ்டின் சோமசெற் கார் ஒன்று உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு:- இ. இராஜராஜேஸ்வரன், 210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி:- 2588. (90497)

## படிவம்

அஞ்சல்/உப அஞ்சல் அலுவலகங்களில் சிற்றூழியர்களுக்கான பதிலாள்களைப் பதிவு செய்வதற்கான படிவம் விற்பனையாகின்றது. விவரங்கள் எல்லாத் தபாலகங்களிலும் பார்வையிடலாம். முடிவுதிகதி:17.8.2001 கல்வித் தகைமை குறைந்தது 8 ஆம் ஆண்டு. நாயகபாலன், மானிப்பாய். (90520)

## A/L பொருளியல்

2001, 2002 க. பொ. த. பரீட்சை எதிர்பார்ப்புகள் அடங்கிய நடைமுறை விடயங்கள், வெளிவாரி விளைவுகள், பேரினப்பொருளாதாரம், பணம், சர்வதேச வர்த்தகம் போன்ற நூல்கள் விற்பனையாகின்றன. 2000 இல் வெளிவந்த நடைமுறை விடயங்கள் அவ்வாண்டுப் பரீட்சையில் 51 புள்ளிகள் பெற உதவியது. ஆசிரியர் வே. கருணாகரன் (90417)

## வாடகைக்கு

வெள்ளவத்தையில் தற்காலிகமாகத் தங்குவோருக்கு முற்பணம் எதுவுமின்றி வாடகைக்கு அறைகள் கொடுக்கப்படும். தொலைபேசி,மருத்துவ சம்பந்தமான உதவிகள், சர்வதேச வாகன அனுமதிப்பத்திரம், விசா போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளுவதற்கான உதவிகளும் செய்து தரப்படும். தொடர்பு:- Zareen J.P., 83, Peniquick Rd, Wellawatta T. P. 589987, 587628. (சி/17580)

## SPOKEN ENGLISH

ஆங்கிலம்,சுலபமான முறையில் எழுத, வாசிக்க கதைக்கப் பயில சுடிதமூலமும் பயிற்சி. ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், நாகலிங்கசுவாமிகள் வீதி, சங்கானை. (90437)

## மணமக்கள் தேவை

உள்நாட்டில், வெளிநாட்டில் தொழில் புரியும் மணமகன்மாருக்கு மணமகள் தேவை.30வயதுக்குட்பட்டவராக இருத்தல் விரும்பத்தக்கது. விரும்புவோர் முழுப் போட்டோ குறிப்புகளுடன் நேரில்தொடர்புகொள்ளவும் நாகலிங்கம் கந்தையா,சோமசுந்தரம் வீதி. ஆனைக்கோட்டை. (90477)

இந்து கௌரவ குடும்ப,செவ்வாயுள்ள,1967 பட்டதாரியான,அழகான பெண்ணுக்கு வெளிநாட்டு மணமகனும் சகோதரன் 1967 கிரகபாவமற்ற டாக்டருக்கு பட்டதாரிப் பெண்ணும்,1960 ஆசிரியருக்கு சைவபோசனப் பெண்ணும் தேவை. முழு விவரம், ஜாதகத்துடன் தொடர்பு:விள. இல. 1342, மே/பாஉதயன். (90421)

1972-03-20 ரோகினி நட்சத்திரம் U K. (A/L படித்த), LONDON இல் Com. படித்த மணப் பெண்ணுக்கு டாக்டர்/ எஞ்சினியர்/ B. Sc. மணமகன் தேவை. அத்துடன் எங்களிடம் எல்லா மதங்களிலும் மணமக்கள் உண்டு. தொடர்பு:- ஜீவா திருமணசேவை, ''ராஜகம்'' சுதுமலை வடக்கு, மானிப்பாய் (90467)

## ஓடுகள் விற்பனைக்கு

பழைய வீட்டு ஓடுகள் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு பார்வையிடலாம்.தொடர்பு: ஞானம், கந்தசாமி, கோயிலடி, நீர்வேலி தெற்கு. (90456)

## புறொயிலர் குஞ்சுகள்

நேற்று வந்த புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு;- வை. சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி அல்லது றஞ்சிதன், சுபகணநாதன் பண்ணை வீதி, மாலு சந்தி, அல்வாய். (90453)

## மணமகன் தேவை

கௌரவ கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973இல் பிறந்த ஆசிரியைத் தொழில் புரியும் அழகிய மணமகளுக்கு தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு:- விளம்பர இல. 1339, மே/பா உதயன். (90362)

கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அரச திணைக்களம் ஒன்றில் பணியாற்றும், 33 வயது மணமகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். தொடர்பு:- விள. இல. 1336, மே/பா உதயன். (90357)

## வரங்க விற்க

கிராமசேவையாளர், A.G.A அனுமதி பெற்ற இரண்டு பெரிய பலாமரங்கள் விற்பனைக்குண்டு. பழைய, பாவித்த கூரைத் தகரங்கள் தேவை. தொடர்பு: சுந்தரலிங்கம். 131/1, பருத்தித்துறை வீதி,நல்லூர்.(நல்லூர் ஆதீன சிவன் கோயிலுக்கு முன் ஒழுங்கை). (90461)

## O/L கணிதம்

புதிய, பழைய பாடத்திட்டத்துக்கமைய கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் Distinction பெறுமளவிற்கு கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (90507)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, சைவ போசனமுடைய, 26 வயது, பட்டதாரி ஆசிரியருக்குப் படித்த, அழகிய, சைவ போசனமுடைய மணப்பெண்ணைப் பெற்றோர் எதிர் பார்க்கின்றனர். தொடர்பு:- விளம்பர இல. 1337, மே/பா உதயன். (90360)

1966 ஆம் ஆண்டு பூராட நட்சத்திரமுடைய ஆஸ்திரேலிய பொறியியலாளருக்குப் பொருத்தமான மணப்பெண் தேவை. சீதனம்பேசித் தீர்க்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமணசேவை. 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (90514)

## இறைச்சிக் கோழிகள் விற்பனை

இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி நல்லூர். (90392)

புறொயிலர், கல்பேட் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு Broiler 1 Kg 150/- வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச்சந்தி.T.P. 3529, 2867. (90512)

# அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

## மகாமாரி விளையாட்டுக்கழகம்

புளியங்கூடல்

முதலாம் பரிசு — 673 இரண்டாம் பரிசு — 995
மூன்றாம் பரிசு — 1708

ஆறுதல் பரிசுகள்

1644, 1693, 1816, 1616, 937

தயவுசெய்து 05-08-2001 ஆம் திகதிக்கு முன் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

- செயலாளர்.

[90513]

# விண்ணப்பம் கோரல்

## கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்

கட்டடத் தொழிலில் தகுதியும் அனுபவமும் வாய்ந்த தச்சுவேலை செய்பவர், மேசன், தொழிலாளி ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பிரதம பொறியியலாளர்

கட்டடங்கள் திணைக்களம்,
46, சோமசுந்தரம் அவெனியூ,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (சி-17603)

# உடன் தகவல் தரவும்

எமது ஆலயத்திற்குச் சொந்தமான ஜென்றேற்றர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு களவாடப்பட்டுள்ளது. மொடல் MAG!2001, பம் 0777.இந்த ஜெனறேற்றரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள், தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கு உடன் அறியத் தரவும்.

ஆலய நிர்வாகப் பொறுப்பாளர்,
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்,
இன்பர் சிட்டி,
வியாபாரிமூலை.

(90510)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

உதிப்பு 17 – 08 – 1933



உதிர்வு 28 – 06 – 2001

## அமரர் சின்னத்துரை இளையதம்பி

பூவிழந்த மனையாளும் பொலிவிழந்துபோனார்
ஆவிழந்த கன்றாகி நாமும் துவண்டுபோனோம்
பாராட்டிச் சீராட்டிப் பக்குவமாய் எமைக்காத்தாய்
பாரில் நாமுள்ளவரை உமை மறவோம் அப்பாவே!

பிரிவால் துயருறும்:

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.**

சண்டில்குளத்தடி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி. (சி/17600)

# மரண அறிவித்தல்

## மாணிக்கம் சுந்தரலிங்கம்

(சின்னக்கிளி)

யாழ்ப்பாணம், ஆரியகுளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மாணிக்கம் சுந்தரலிங்கம் கடந்த (25—07—2001) புதன்கிழமை பிரான்ஸில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு மாணிக்கம் மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்பு மகனும் நீற்றாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பூவிலிங்கம் மற்றும் கனகரத்தினம் (சமாதான நீதிவான்), செல்வராசா, மகாலட்சுமி, நவமணி, கனகசுந்தரம் (எ. சி. டி. சி), குமரேசன் (பொறின் ஸ்ருடியோ), பாலச்சந்திரன், சண்முகராசா (ராசன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாமி (அம்பாள் மினிபஸ் உரிமையாளர்), காலஞ்சென்ற தாமோதரன் (தரன் ஸ்ருடியோ), றோசம்மா, விக்னேஸ்வரி, பரமேஸ்வரி, சறோஜினி தேவி, நாகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28-07-2001) சனிக்கிழமை பிரான்ஸில் நடைபெறும். அவர் பிறந்த இல்லத்திலும் இன்று அன்னாரின் நினைவாக ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா. குமரேசன் (சகோதரர்)
(பொறின் ஸ்ருடியோ)

82/17, பருத்தித்துறை வீதி,
3 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (90515)

# பழுதடைந்த நிவாரண அரிசியை கால்நடை உணவாக்க முடிவு

யாழ்ப்பாணம்,ஜூலை28

கடந்த காலத்தில் நிவாரணத்துக்கு வழங்குவதற்காகக் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் குடாநாட்டுக்கு எடுத்து வரப்பட்ட அரிசியில் மனித பாவனைக்கு உதவாதது என்று பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பெருந்தொகையான அரிசியை கால்நடைத் தீவனமாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு யாழ்.செயலக திட்டப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

நிவாரணத்துக்கு வழங்குவதற்காக களஞ்சியங்களில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த அரிசியே பழுதடைந்திருப்பது கண்டறியப்பட்டதை அடுத்து அந்த அரிசி பொதுமக்களுக்கு வழங்காமல் மீண்டும் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதனைக் கால்நடைத் தீவனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அரிசியை உடைத்துக் குறுணலாக விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னர் குருநகர் களஞ்சியத்தில் பொருத்தப்பட்டிருந்த அரிசியைக் குறுணலாக்கும் இயந்திரம் தற்போது கொக்குவில் களஞ்சியத்தில் உள்ளது.

அதன் மூலம் பழுதடைந்த அரிசியைக் குறுணலாக்கிப் பொதுமக்களுக்கும், பண்ணையாளர்களுக்கும நேரடியாக விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னைய காலங்களில் ஒரு கிலோ குறுணல் அரிசி 5ரூபாய்ப்படி விற்பனை செய்யப்பட்டது. அரிசி குறுணலாக்கும் பணி முடிவடைந்ததும் அதன் தற்போதைய விற்பனை விலை தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

குடாநாட்டில் உணவுப் பொருள்களைக் களஞ்சியப்படுத்தி வைக்க களஞ்சிய வசதிகள் இல்லாத காரணத்தால் பழுதடைந்த அரிசி களஞ்சியப் படுத்தப்பட்டுள்ள இடங்களில் இருந்து அவற்றை விரைவில் அப்புறப்படுத்துவதன் மூலம் புதிய பொருள்களைக் களஞ்சியப்படுத்த நடவடிக்கை எடுக்கமுடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ஜ-6)

## சாப்பாட்டுக்கு முன்னர் குலுக்கிக் குடிக்கவும்

"அங்கிருந்த வேலையாள்களில் ஒருவனைக் கூப்பிட்டு கடதாசியும், மையும், பேனையும் வரவழைத்து ஒரு கடிதம் எழுதி...."

'ஈழகேசரிச் சிறுகதைகள்' நூலில் வருகின்ற சானாவின் 'நாட்டியப் பெண்' கதையில் இந்த வரிகள் வருகின்றன. 1941 இல் எழுதப்பெற்ற இவ்வரிகள் இன்றுள்ளவர்களுக்கு ஆச்சரியமாகவிருக்கலாம். ஆனால் அதற்கு ஒரு தசாப்த காலத்துக்குப் பின்னரும்கூட இந்த நிலைதான். மறுமலர்ச்சிக் காலம், ஈழகேசரிக்காலம், சுதந்திரன் காலம் என்பது போல பேனா வரலாற்றை எடுத்துக் கொண்டாலும், தொட்டெழுதிய காலம், ஊற்றுப் பேனாக்காலம் என்றெல்லாம் நீண்டுதான் இன்றைய குமிழ்முனைப் பேனாக் காலத்துக்கு வந்திருக்கிறோம்.

பேனாவினால் மையைத் தொட்டெழுதிய காலத்தை எம்மால் இலேசில் மறந்துவிட முடியாது. பேனா என்பது பென்சில் போன்ற ஒரு தடிதான். அதன் ஒரு பக்கத்தில் NIP எனப்படும் குச்சி செருகியிருக்கும். போத்தலிலுள்ள மையிலே தொட்டுத் தொட்டு எழுதவேண்டும். எழுதிய மை உடனே காய்ந்து விடாது. அதனால் எழுதிக்கொண்டு வரும்போதே இடையிடையே எழுதிய பகுதிகளை ஒற்றிக்கொண்டும் வரவேண்டும்.. அதற்கென 'BLOTTING PAPER' எனப்படும் தடித்த மை ஒற்றும் காகிதமும் கூடவே வைத்திருக்க வேண்டும்.

இந்த இடத்திலே, பெண்களுக்கென அக்காலச் சமையல் குறிப்பு ஒன்றினைத் தரட்டுமா? சமைத்த கறியில் தவறுதலாக உப்பைக் கூடப் போட்டுவிட்டீர்களா? கவலையை விடுங்கள். இந்த மை ஒற்றும் காகிதத் துண்டுகளை கறியில் போட்டு எடுங்கள் சரியாகிவிடும்.

பள்ளிக்கூடத்துக்குப் புத்தகச் சுமையுடன் மைக்கூட்டையும் சிந்தாமல் கவனமாகக் கொண்டு சென்று வரவேண்டும். வகுப்பு மேசையிலும் இந்தப் பேனாத் தடிகளை வைப்பதற்கென்று பேனா நீளத்துக்கு ஒரு பள்ளமும், மைக்கூட்டை வைப்பதற்கென்றே ஒரு துவாரமும் கூட வைத்திருப்பதுண்டு. அதற்கென்றே ஒருவகை மார்பிள் மைக்கூடுகள் கூட அப்பொழுது இருந்திருக்கிறது. இந்த மையையும் மாணவர்கள் தாங்களே தயாரித்துக் கொள்வதற்கு வசதியாக மைக் கரைகளும் மை வில்லைகளும் கடைகளில் அப்போது விற்பனைக்கிருந்தன.

இந்தப் பேனாத் தடிகளில் பொருத்துகின்ற குச்சிகளிலும் பல வகைகள் இருந்தன. இருந்தாலும் 'ஜி' நிப்பால் எழுதினால் தான் எழுத்துத் திருந்தும் என்பது 'ஆன்றோர்' வாக்கு. எனது அனுபவத்தில்




அதனால் எழுதுவதென்பது கடதாசியில் 'உழு'வதற்குச் சமம். இந்தத் தொட்டெழுதுகிற காலத்தில் 'அச்சுக்கொப்பி' என்றொரு புத்தகமும் 1,2,3 என இருந்தது. அதன் ஒவ்வொரு பக்கத்திலும் முதல் வரியில் எழுத்துக்கள் – வாக்கியங்கள் என்றிருக்கும். அதன்கீழ் வரிவரியாகக் கோடுகளிடப்பட்டிருக்கும். அச்செழுத்துக்களைப் பார்த்துப் பார்த்து 'ஸ்ரீராம ஜெயம்' எழுதுவது போலத் திரும்பத் திரும்ப – அதுவும் 'ஜி' நிப்பால் எழுதிப் பழகினால் நாம் சிறந்த எழுத்தாளர்களாக, அல்ல அழகான எழுத்தாளர்களாக முடியுமாம்.

அப்பொழுதெல்லாம் படிக்கின்ற பிள்ளைகளையும் மை விளையாட்டுக்களைக் கொண்டு அறியலாம். ஒருவருக்கொருவர் மை தெளிக்கிற.... அல்லது தங்களுக்குத் தாங்களே மைபூசிக்கொள்கிற.... சுருக்கமாகச் சொல்வதென்றால் அக்கால மாணவர்கள் வீட்டுக்கு வந்தால் உப்புச் சவுக்காரம் கொண்டு கைகழுவினால் தான் மற்ற அலுவல்களைக் கவனிக்க முடியும்.

ஊற்றுப் பேனா புழக்கத்துக்கு வந்ததும் மைக்கூடுகாவும் வேலை இல்லாமற் போய்விட்டது. பேனாவில் மை நிரப்பினால் போதும். பேனாவில் தலைப் பகுதியைக் கழற்றி 'மை நிரப்பி' மூலம் மை எடுத்துவிடுகிற வகைப் பேனாக்கள் என்றும், தலைப் பகுதியை மைப் போத்தலுக்குள் விட்டு உறிஞ்சி எடுக்கிற வகைப் பேனாக்கள் என்றும் ஊற்றுப் பேனாக்கள் இருந்தன. பாக்கர் – 51, சுவான் என்றெல்லாம் அதி உயர்ந்த வகைப் பேனாக்களும், அந்தப் பெயர்களிலான பல நிற மைப் போத்தல்களும் இருந்தன. எல்லாரும் பாவிக்கக்கூடியதான ஒரு தரமான பேனாவாக 'பைலட்' விளங்கியது. அதன் விலை ஆரம்ப காலத்தில் ரூபா ஐந்தாக இருந்தது.

மாணவர்களின் மை விளையாட்டுக்கள் இக் காலத்திலும் தொடரவே செய்தன. அக்காலத்தில் 'பகிடி வதை' என்றால் ஒருவருக்கொருவர் மை தெளிக்கிற வதைதான். அதுவும் ஏப்ரல் முட்டாள் தினத்தன்று பள்ளிக்கூடமும் இருந்து விட்டால்..... அப்பொழுது ஆனைக்கோட்டை மகேசன் என்பவரும் எங்களுடன் படித்தவர். இவரை 'பேனை மெக்கானிக்' என அழைப்போம். ஊற்றுப்பேனாக்களுக்கு ஏற்படுகின்ற கோளாறுகளைப் பகுதிநேர வேலையாக ஏற்றுக் கொண்டு சேவை அடிப்படையில் திருத்திக்கொடுப்பார். ஆளைப் பார்த்தாலே தொட்டெழுதும் காலத்தவரோ என எண்ணத் தோன்றும்.....

இப்பொழுதெல்லாம் எங்கு பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும் குமிழ் முனைப் பேனாக்கள் என்றாகிவிட்டது. அது வரை ஊற்றுப் பேனா தான். பச்சை மைக்காரர், வைலட் மைக்காரர் என்றெல்லாம் சில பிரமுகர்களின் 'தனித்துவங்கள்' பேசப்பட்டதுண்டு.

என்ன இருந்தாலும் அழகான கையெழுத்துக்கு சொந்தமானவர்கள் – அவர்கள் தலையெழுத்து எப்படி இருந்தாலும் – அக்காலத்தில் ஜி நிப்பினால் அச்சுக்கொப்பி எழுதிப் பயிற்சி பெற்றவர்களே! அப்படியானால் இந்த டாக்குத்தர்மார்களுக்கு அந்தப் பயிற்சி இல்லை போல் இருக்கிறது.

ஒருவருக்கு தபாலில் வந்த அந்தச் சிறு கடிதத்தினை அவரால் படித்துப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரே கிறுக்கலாக இருந்தது. அவரின் மனைவி அதற்கு ஒரு வழி சொன்னாள் "பக்கத்து வீட்டு மருந்தாளரிடம் காட்டிப் பாருங்கள். அவர்கள் டாக்குத்தர்மார்களின் மோசமான கையெழுத்தையெல்லாம் புரிந்து கொண்டு மருந்து கொடுப்பவர்களாயிற்றே"

அதன்படி இவரும் மருந்தாளரிடம் கடிதத் துண்டை காட்டியிருக்கிறார். அவர் அதைப் படித்து விட்டு சொன்னார் "நாளொன்றுக்கு மூன்று முறை... சாப்பாட்டுக்கு முன்னர்... குலுக்கி குடிக்கவும்" (நோயாளியை அல்ல மருந்துக்கலவையை)

- சண் அங்கிள்.

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை28

வடமராட்சி வடக்கு முன்பள்ளிச் சிறுவர்களின் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவர் திருமதி ச.அழகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாகப் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஜ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை28

கரவெட்டி பிரதேச சபையின் முன்பள்ளி விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிககு க.சுப்பிரமணியம் தலைமையில் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேச சபையின் செயலாளர் சி.பசுபதி கலந்து கொள்ளவுள்ளார். (ஜ-10)

## ஜி.சீ.ஈ. உயர்தர மாணவருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை28

இணுவில் மற்றும் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடத்தும் ஜி.சீ.ஈ. உயர்தர வர்த்தக, கலைப்பிரிவு மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கும் வழிகாட்டலும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் ஒரு மணி வரையும் இணுவில் மத்திய கல்லூரியிலும் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (ம-10)

## போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை28

தபால்திணைக்கள சிற்றூழியர்களையும், உப அஞ்சல் அலுவலர்களையும், அஞ்சல் அலுவலர் தரம் IIக்கு தேர்ந்தெடுப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை ஒன்று நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் எதிர்வரும் 31ஆம திகதிக்கு முன்னர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அஞ்சல் அதிபர் நாயகத்துக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதால் தகுதியானவர்கள் உடனடியாக விண்ணப்பிக்குமாறு பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் தெரிவித்துள்ளார். (ம-6)

## புலமைப்பரிசில் நிதியை அதிகரிக்க முடிவு

தென்மராட்சி,ஜூலை28

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் புலமைப்பரிசில் திட்டத்தில நிதி உதவி பெறும் மாணவர்களுக்கு 79ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி மேலும் ஒரு தொகை நிதியை வழங்க சங்க இயக்குநர் சபை முடிவுசெய்துள்ளது.

இதன் பிரகாரம் சங்கத்தின் புலமைப்பரிசில் நிதி பெறும் மாணவர்கள், சங்க கிராமிய வங்கியில் இந் நிதியை பெற்றுக்கொள்ளலாமென சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை அறிவித்துள்ளார். (ஜ-117)

## கணித, விஞ்ஞான[illegible]

தென்மராட்சி க[illegible] பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கணித, விஞ்ஞானபாட பொது அறிவுப் போட்டிகள் நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (ஜ-117)

## மீண்டும் ஆரம்பம்

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆள் சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் இன்று முதல் வேம்படி மகளிர் கல்லூரியில் மீண்டும் வழமை போல் நடைபெறவுள்ளதாக மேற்படி பயிற்சிநெறிக்கான இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஜ-99)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்



### வழங்கிடுவாய் நல்லையானே!

நிலம்விட்டு அகம்விட்டு நெறியற்று
நிம்மதியை இழந்துவிட்டு,
அலமந்து பொறிகலங்கி அகதிகளாய்
அலைந்தலைந்து அல்லற்பட்டு
பலமற்றுப் பசியுற்று நேர்த்தி செய்து
பணிந்திட்டு உனதுகோயில்
வலம்வந்து வாழ்வோங்க வரங்கேட்டோர்
வழங்கிடுவாய் நல்லையானே.

- முருகனடியான் -

### இளைஞரும் இனி இறைஞ்சுவாரோ?

வான் புகழ் கோபுரங்கள் சூழ
வள்ளி தெய்வானையோடு
தேன் கமிழ் சோலை தன்னில்,
செருக்குடன் இருக்கும் செல்வா
கண்கணீர் வடித்தலறுவோரின்
கதை கேட்க நேரமேது?
ஒன்று மட்டும் சொல்வேன் வேலா!
ஒரு முறை கருணை காட்டு,
இன்னும் நீ இரங்காயானால்;
இளைஞரும் இனி இறைஞ்சுவாரோ?

- விகடகவி -

### குருவாய் வருவாய் வேல்முருகா!

உருவாய் வருவாய் வேல்முருகா
உளமுருகி உன்னைப்பாடிடவே,
தருவாய் தண் கடலாம் உன் கருணை
தரணியெலாம் உனைப் போற்றிடவே
திருவாய்க் கதிராய்த் திகழ் குமரா
திருவே உனைநிதம் பணிந்திடவே,
குகனாய் எம்மிடி போக்கி வாழ்வளிக்க
குருவாய் வருவாய் வேல்முருகா!

- சா.இரஞ்சினி -

### புதுவாழ்வருள்வாய் முருகா!

புள்ளி மயிலேறும் பெருமானே வேலவனே
புதுவாழ்வருள்வாய் ஞான குருபரனே!
வள்ளி மணவாளனே வானோர் சிறைமீட்ட
வடிவேலவனே தேவசேனாபதியே
துள்ளி விளையாடிடும் கோல மயில் மீது,
கோலாகலமாய் வந்திடும் குகனே!
அள்ளி அணைத்திடவே ஆசை கொண்டேன் முருகா!
அன்பர்க்கருள் புரி நல்லூர் வடிவேலவனே!

- கவிமணி இராசையா ஸ்ரீதரன் -

### உற்றதுயர் துடைக்க வாராய்

தீராத நோயெலாந் தீர்த்தருள வேண்டும்
திருவுடனே நாமெல்லாம் வாழவே வேண்டும்
போராடும் நிலையினிப் போயிடவே வேண்டும்
பொழுதெல்லாம் மகிழ்வுடனே வாழவேண்டும்
சேராத இன்பமெலாஞ் சேர்ந்திடவே வேண்டும்
செவ் வேலா நீயிதற்கு அருள வேண்டும்
ஓராறு முகத்தோனே உன்னருளே வேண்டும்
உற்றதுயர் துடைக்க ஓடோடி வாராய்

- செ.சுதாகரன் -

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## சுவாமி விபுலானந்தர் இசை, நடனக் கல்லூரி

சுவாமி விபுலானந்தர் இசை, நடனக் கல்லூரி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பொருத்த மானவர்களிடமிருந்து என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**கலை, கலாசாரபீடம்**

1) சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்: I/II/ விரிவுரையாளர் (தகுதிகாண்) / தற்காலிக உதவி விரிவுரையாளர்/ தற்காலிக போதனாசிரியர் - கர்நாடக சங்கீதம்.
2) சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/II/ விரிவுரையாளர் (தகுதிகாண்) / தற்காலிக உதவி விரிவுரையாளர்/ தற்காலிக போதனாசிரியர் - பரதநாட்டியம்.

**சம்பள அளவுத்திட்டம்**

| | |
|---|---|
| 1. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I {B-03 (A)} | : Rs 21,500 - x475 - 25,300/- மாதமொன்றுக்கு |
| 2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II {B-03} | : Rs 18,325 - 5x475 - 20,700/- மாதமொன்றுக்கு |
| 3. விரிவுரையாளர் (தகுதிகாண்:{B-04) | : Rs 11,820 - 10x375 - 15,570/- மாதமொன்றுக்கு |
| 4. தற்காலிக உதவி விரிவுரையாளர்: | : Rs 10,800/- மாதமொன்றிற்கு (நிலையானது) |
| 5. தற்காலிக போதனாசிரியர் | : Rs 8,715/- மாதமொன்றிற்கு (நிலையானது) |

அத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளும் வழங்கப்படும்)

வயதெல்லை: 45 இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
(அரச திணைக்களங்கள், நியதிச் சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் பணிபுரிபவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல)

விண்ணப்பப் படிவங்களையும், வேண்டப்படும் கல்வித் தகைமைகளைக் கொண்ட விவரங்களையும் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பெற விரும்புவோர், படிவமொன்றிற்கு, செங்கலடி தபால் நிலையத்தில் மாற்றத்தக்கதாக ரூபா 20/- பெறுமதி கொண்ட தபால்கட்டளை அல்லது காசுக்கட்டளையைச் செலுத்துவதன் மூலம் உதவிப் பதிவாளர்/தாபனங்கள், கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை, வந்தாறுமூலை, செங்கலடி என்ற முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தபால்கட்டளை அல்லது காசுக்கட்டளை "நிதியாளர்" கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை என்ற பெயரில் எடுக்கப்படல் வேண்டும். தபாலில் விவரங்களைப் பெறவிரும்புவோர் இதனுடன் சுய விலாசமிடப்பட்ட, முத்திரை ஒட்டிய 23x10cm அளவிலான தபாலுறை ஒன்றினை அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

பிற உயர்கல்வி நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், அரச திணைக்களங்கள், நியதிச்சபைகள் என்பவற்றில் கடமைபுரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவரின் ஊடாகவே அனுப்பிவைத்தல் வேண்டும். ஆயினும் கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு முற் பிரதிகளை நேரடியாக அனுப்பிவைக்கலாம். எவ்வாறாயினும் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக மூலப்பிரதிகளை அனுப்பத்தவறும் விண்ணப்பதாரிகள் எவரும் நியமனத்திற்கு கருத்திற்கொள்ளப் படமாட்டார்கள்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 27-08-2001 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக உதவிப் பதிவாளர்/தாபனங்கள், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, வந்தாறுமூலை, செங்கலடி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை,*
*வந்தாறுமூலை, செங்கலடி. 24.07.2001* (சி/17593)

- பதில் பதிவாளர்.

# அழைப்பு

*தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையும்,*
*வடக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு தமிழர் விவகார அமைச்சும்*
*இணைந்து நடத்தும், தென்னைச் செய்கையில் 'மைற்ஸ்' (Mites) நோய்த் தாக்கம்*
*பற்றிய கருத்தரங்கும், செயல் விளக்க விழாவும்*

தென்னைச் செய்கையில் 'மைற்ஸ்' நோய்த் தாக்கம், கட்டுப்பாடு பற்றிய கருத்தரங்கும், செயல் விளக்க விழாவும் அத்துடன் தென்னைச் செய்கையாளர்களுக்கு இலவசமாக 'மைற்ஸ் கொல்லி' மருந்து வழங்கும் நிகழ்வும் நடைபெறும்.

*இடம்:* **வில்லூன்றி தீர்த்தப் பிள்ளையார் ஆலயம், கொட்டடி, யாழ்ப்பாணம்.**
*நாள்:* **நாளை (29-07-2001) ஞாயிற்றுக்கிழமை**
*நேரம்:* **காலை 9.00 மணி** (இலங்கை நேரம்)

தலைமை: *திரு சி. சிவச்சந்திரன* (வடபிராந்திய முகாமையாளர், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை)

பிரதம விருந்தினர்: *திரு க. மனிக்கவாசராஜன* (நிஷாந்தன்) J.P.U.M. (தலைவர், நல்லூர் பிரதேச சபை)

கௌரவ விருந்தினர்: *திரு. P. செந்தில்நந்தனன்* (பிரதேச செயலர் - யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்:
1) *திரு. செ. மகாலிங்கம்* (திட்டப்பணிப்பாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்)
2) *திரு. ச. சின்னத்துரை* (உதவி விவசாயப்பணிப்பாளர், விவசாயத் திணைக்களம், திருநெல்வேலி)
3) *திருமதி S. விஜயரத்தினம்* (பொறுப்பதிகாரி, விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி)
4) *திரு. S. கோகுலதாசன்* (பொதுமுகாமையாளர், பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்)
5) *திரு. ஐ. நல்லதம்பி* (தலைவர், வடமாகாண தென்னை வளர்ப்போர் சங்கம், அசதிகள் புனர்வாழ்வு நிறுவனம்)
6) *திரு. S. பத்மநாதன்* (இளைப்பாறிய அதிபர்) (செயலாளர், வடமாகாண தென்னை வளர்ப்போர் சங்கம்)

மைற்ஸ் கட்டுப்பாட்டு திட்ட நடைமுறை: *திரு. சி. சிவச்சந்திரன்* (வடபிராந்திய முகாமையாளர், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை)

தென்னைச் செய்கையில் மைற்ஸ் நோய்த் தாக்கமும், அதன் கட்டுப்பாடும்: *திரு. ஜெ. சத்தியேந்திரன்* (யாழ்மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, நல்லூர்)

நன்றியுரை: *திரு S.K. மகாலிங்கம்* (கிராம உத்தியோகத்தர், கொட்டடி)

✪ எனவே அனைவரும் அன்புடன் அழைக்கப்படுவதுடன், கலந்து பயனடையுமாறு வேண்டுகின்றோம்.

**தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை,**
*பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.*

விளம்பர அனுசரணை:-

**அசோகா நகையகம்,** *இல.111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

***V.M.K.* ஜுவலர்ஸ்,** *கண்டி வீதி, சாவகச்சேரி, யாழ்ப்பாண முகவரி: கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

**சாரங்கா நகைமாடம்,** *177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.* T.P:2480

**சாரங்கன் நகைமாடம் அன் சென்ரர்,** *45, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.*

(90468)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

**28-07-2001**

H A P P Y



B I R T H D A Y

## செல்வி கிருஷ்ணானந்தி

(கிஷானா)

சுவிற்ஸர்லாந்திலுள்ள
திரு.திருமதி பகீரதன் - சாருகாசினி
தம்பதிகளின் செல்வ மகள்
கிருஷ்ணானந்தி (கிஷானா)

தனது முதலாவது பிறந்த நாளை சுவிற்ஸர்லாந்திலுள்ள அவரது இல்லத்தில் இன்று (28-07-2001) சனிக்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றாா்.

கிஷானாவை அப்பா, அம்மா, அப்பப்பா, பபாச் சித்தப்பா, யசோ ஆசையப்பா, பெரியத்தை, ஆசையத்தை, கெங்காப் பெரியப்பா பெரியம்மா, அம்மப்பா, மாமாமார் குடும்பம், பெரியம் மாமார் குடும்பம், அத்தைப்பாட்டி யாவரும் மண்டைதீவு சித்திவிநாயகப் பெருமான் திருவருளால் சகல கலைஞானமொடு, சீரும் சிறப்பும் பொருந்த, பேரும் புகழும் பெற்று வாழ்வாங்கு நீடு வாழவேண்டுமென வாழ்த்துகின்றனர்.

*333/2, நாவலர் லேன்,*
*நாவலர் றோட்,*
*யாழ்ப்பாணம்.* (90447)

ந.ஞானமணி
(அத்தைப்பாட்டி).

# உங்கள் நினைவில் மூன்று ஆண்டுகள்....

மண்ணில் 21 - 11 - 1918



விண்ணில் 03 - 07 - 1998

## அமரர் பொன்னம்பலம் செல்வரத்தினம்

**திதி : 28-07-2001**

*ஆண்டுகள் மூன்று சென்றாலும்*
*தீயில் நீங்கள் வெந்தாலும்*
*நெஞ்சம் மறக்குமா உங்கள் நினைவுகளை?*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*163/3, கண்டி வீதி,*
*சின்னக் கிணற்றடி ஒழுங்கை,*
*அரியாலை.* (90438)

- குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும்

மண்ணில் 15 - 08 - 1976



விண்ணில் 28 - 06 - 2001

## கணபதிப்பிள்ளை சிவகுமார்

சிவா *(ரெயிலறிங்)*

முப்பத்தொரு நாள் சென்றாலும்
உமது நினைவு இன்னும்
எம்மை விட்டு அகலாது.
தங்கை, தம்பியரை கதறித் துடிக்க விட்டு
எங்களை ஏங்க விட்டு
உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரையும் சோகத்தில் மூழ்கவிட்டு
எங்கு சென்றாய்?

தற்காலிக முகவரி:-
*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.*

நிரந்தர முகவரி:-
*அல்லாரை வடக்கு, கொடிகாமம்.*

குடும்பத்தினரும்,
கந்தசாமி குடும்பத்தினரும்.
(பெரியப்பா)

(90479).

# வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவைக்கு இலங்கை நில அளவையாளர் சேவையின் வகுப்பு III தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2001

**வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவையில் வெற்றிடமாக உள்ள இலங்கை நில அளவையாளர் சேவையின் வகுப்பு III தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு கீழே குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆண்/பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதி 2001.08.27 ஆகும்.**

## 02. சேவைக்கான நிபந்தனைகள்:-

1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் பெறுபவர்கள் விதவைகள் அநாதைகள்/ தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துமாறு வேண்டப்படுவர்.
2. இது ஓர் இடமாற்றச் சேவையாகும், இவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கடமைப்பட்டவர்களாவர்.
3. சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்குப் பயிற்சி வழங்கப்படும். இதில் 2 வருடங்களுக்குக் குறையாத காலம் தியத்தலாவையிலிலுள்ள, அளவையும் படமாக்கலுக்குமான நிறுவனத்திலும மிகுதிக்காலம் வெளிக்கள செயல்முறைப் பயிற்சியாகவும் அமையும். இக்கால எல்லை தகுதிகாண் காலமாகக் கணிக்கப்படும்.
4. மேற்கூறப்பட்ட பயிற்சிக் காலத்தை சிறப்பாகப் பூர்த்தி செய்து, நில அளவைத் தொழில்நுட்பவியலாளர் டிப்ளோமா பாடநெறி(உயர்தரம்) பரீட்சையில சித்த' பெறுவோர் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்.
5. மேலே 4 இல் குறிப்பிட்டுள்ள பரீட்சையில் பூரணமாகச் சித்தியடையத் தவறியவர்களது தகுதிகாண் காலம் நியமனத் திகதியிலிருந்து ஆகக் கூடுதலாக 05 வருடங்கள் வரை நீடிக்கப்படும். அக்கால எல்லைக்குள் பரீட்சையில சித்தியெய்தாதவர்களது சேவை நிறுத்தப்படும்.
6. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் ரூபா 150,000/= (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம ரூபா)வுக்குக் கூடுதலான பெறுமதியான உடைமைகளைச் சொந்தமாக வைத்திருக்கும் அங்கீகரிக்கப்பட்ட, உத்தரவாதி சகிதம் நில அளவைத் திணைக்களத்துடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தின் பிரகாரம் தாம் தகுதிகாண் காலத்தைப் பூர்த்திசெய்த பின்னர் திணைக்களத்தில் 08 வருடங்கள் தொடர்ச்சியாக வேலைசெய்ய இணக்கத்தைத் தெரிவிக்கவேண்டும்.

## 03. சம்பள அளவுத் திட்டம்:-

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 2/87(III) இன்படி
ரூபா 62,400 - 3X1,320 - 8X1,560 - 78,840/= (T-2-2-1) ஆகும்.

## 04. தகைமைகள்:-

அ. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ஆ. அவர் சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்வராக இருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பதாரி இவ் விண்ணப்பமுடிவு திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும்,26 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில்/மாகாண அரச சேவையில் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல).

ஈ. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது இவ்விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் உள்ள 06 ஆண்டு காலப் பகுதியில் ஆகக் குறைந்தது 03 அண்டுகளாயினும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:-** வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாக அல்லது நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருந்த போதிலும், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் அசாதாரணச் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களில் தற்காலிகமாக வதிவோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் தமது தற்போதைய தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடமெனக் காண்பித்து வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது அவ்வாறெனில் அதனை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமும், இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

## 05. கல்வித் தகைமைகள்:-

I. விண்ணப்பதாரி சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் அல்லது க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி அல்லது இலக்கியம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி அடங்கலாக கீழ்க்காணும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி பெற்று மொத்தமாக நான்கு (04) திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**பாடங்கள்:**

**இரசாயனவியல், கேத்திரகணிதம், இயந்திரவியல் வரைதல், பிரயோககணிதம் பௌதிகவியல், உயர்கணிதம்**

அல்லது

க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றுடன் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தி உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

தேசிய பொதுக் கல்வித் தராதரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றுடன் மேலும் ஒரு பாடத்தில் 'B' தரத் திறமைச்சித்தி உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

II. க.பொ.த (உ/த) பரீட்சையில், தூய கணிதம் உட்பட நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். பௌதிகவியலில் சித்தியடைந்தவர்கள் குறித்து கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

**குறிப்பு:-** இவ் விண்ணப்ப முடிவு திகதிக்கு முன் மேற்குறிப்பிட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும் பெறுபேறுகளை எதிர்பார்த்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

## 06. ஆட்சேர்ப்பு முறை:-

I. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம், அரச சுற்று நிருபங்களுக்கு அமைவாக எழுத்துப் பரீட்சைப் பெறுபேற்றின் திறமையடிப்படையில் விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவர்களிடம் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் ரத்துச் செய்யப்படும். எனினும் இந்நோமுகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. எழுத்துப் பரீட்சை நடத்துவது கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுக்கேற்ப தீர்மானிக்கப்படும்.

II. நிலவும் வெற்றிடங்களில் 3 வீதம் வலது குறைந்த நபர்களுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் தகைமை பெறுகின்ற வலது குறைந்த நபர்களில் கூடிய புள்ளி மட்டத்தை அடைகின்ற 3 வீதமானவர்கள் நியமனம் வழங்குவதற்காகத் தெரிவுசெய்யப்படுவர். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் குறைந்தபட்சம் 40 சதவீதமாவது ஆதல் வேண்டும். நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி ஒருவர் தனது வலது குறைந்த நிலையையும், சமபந்தப்பட்ட பதவியில் கடமையாற்றுவதற்காக அது தடையாக இராது என்பதையும் மருத்துவ நிபுணரொருவரின் அறிக்கை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

## 07. எழுத்துப் பரீட்சை:

மேலே பந்தி 05 இல் கொடுக்கப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல்கள் தியத்தலாவை, அளவையும் படமாக்கல் நிலையத்தால் வழங்கப்படும். இப்பரீட்சை தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடத்தப்படும்.

## 08. பரீட்சைக் கட்டணம்:

விண்ணப்பதாரி தாம் வதியும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200/= ஐச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். இப் பணம் வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் 6004 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் வரவில் சேரக்கூடியதாக பிரதேச செயலகத்தினால் கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு இன்றி அனுப்பப்படும் எந்த ஒரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். அத்துடன் எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச செலுத்தப்படமாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்குத் தற்காலிகமாக இடம்பெயர்ந்துள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 200/= ஐச் செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு - கிழக்கு மாகாணம் திருகோணமலை என்ற பெயருக்குக் காசுக்கட்டளையாகப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும

## 09. விண்ணப்பிக்கும் முறை:

இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவங்களுக்கமைவாக ஏ4 அளவிலான (21செ.மீ. X 29 செ.மீ ) தாளில் இரு பக்கங்களையும உபயோகித்து விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 2001-08-27ஆம் திகதிக்கு முன்னர், செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, இ.35, மக்கெய்ஸர் வீதி, உவர்மலை, திருகோணமலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவைக்கு இலங்கை நில அளவையாளர் சேவையின் வகுப்பு III தரம் III பதவிக்கு ஆட் சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2001" என்று பரீட்சையின் பெயரை தெளிவாக எழுதுதல் வேண்டும்.

விண்ணப்பதாரி ஒருவருக்கு அனுமதி அட்டை எழுத்துப் பரீட்சைக்குக் குறைந்தபட்சம் ஏழு நாள்களுக்கு முன்பாவது கிடைக்கப்பெறாவிடின், அவர் அதனைப் பற்றி உடனடியாக மேலே தரப்பட்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவேண்டும்.

## 10. பரீட்சை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரதான பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின் வருமாறு:-

| நகரம் | | எண் | நகரம் | | எண் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | - | 1 | திருகோணமலை | - | 6 |
| மன்னார் | - | 2 | மட்டக்களப்பு | - | 7 |
| வவுனியா | - | 3 | அம்பாறை | - | 8 |
| கிளிநொச்சி | - | 4 | கல்முனை | - | 9 |
| முல்லைத்தீவு | - | 5 | | | |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப் பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**திருமதி க.சிவசிதம்பரம்,**
செயலாளர்,
மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு-கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

(C/17594)

மாதிரி விண்ணப்பப் படிவம்
8 ஆம் பக்கத்தில்

# விபத்தில் மூதாட்டி காயம்

பாடசாலை மாணவர்களை ஏற்றி வந்த மினிபஸ் மோதியதில் மூதாட்டி ஒருவர் காயமடைந்தார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில யாழ் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றது. காயமடைந்த மூதாட்டி யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-69)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**நாதோலை அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயம், இளவாலை.**

மேற்படி ஆலய புனரமைப்புக்காக மூன்று லட்ச ரூபா நிதியை ஒதுக்கி அதில் 1 1/2 லட்சத்தை உடன் வழங்கி உதவியமைக்காக



மாண்புமிகு கௌரவ அமைச்சர்
**திரு. K.N.டக்ளஸ் தேவானந்தா**
*அவர்களையும்*



வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினரும்
ஈ.பி.டி.பி. கட்சியின்
காங்கேசன்துறை அமைப்பாளருமாகிய
**திரு. தி.சிவகுமார் (வேலு)**
*அவர்களையும்*
பாராட்டி வாழ்த்துகிறோம்.

*நாதோலை அருள்மிகு முத்துமாரி அம்மன் பரிபாலனசபையினர்.*

(90481)



# மண்ணில் இருந்து விண்ணுக்கு



அமரர்
**பொன்னையா கதிரவேலு**

மண்ணில்:-18.04.1916
விண்ணில்:-28.07.1983

வருடாந்த மதச்சடங்குகள்
08-08-2001இல்
லண்டனில் நடைபெறும்

திருமதி
P.கதிரவேலு.

(C-17597)



# ஏழாம் ஆண்டு நினைவலைகள்

அவசியப் பிறப்பு
12 . 03 . 1932



அவசர அழைப்பு
14 . 08 . 1994

அமரர்
**ஆறுமுகம் லோகேஸ்வரன்**
(இளைப்பாறிய ஆசிரியர், யா/அச்சுவேலி மத்திய கல்லூரி)
திதி: 28-07-2001

வீணர் ஏவிவிட்ட எதிகணைதான் எமனாகி
வீணாக எமைவிட்டு விண்ணுலகம் சென்றதனால்
விம்முகின்றோம், வெதும்புகின்றோம், விதியை நொந்தழுதோம்
விரைந்து நீங்கள் வருவதற்காய் வழிமீது விழி வைத்தோம்!

பிரிவால் துயருறும்:
மனைவி, மகள், மகன்,
மருமக்கள்,
பேரக்குழந்தைகள்.

நீர்வேலி தெற்கு.
நீர்வேலி.

(90490)


(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மாதிரி விண்ணப்பப் படிவம்
## வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவைக்கு இலங்கை நில அளவையாளர் சேவையின் வகுப்புIII தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2001

**சுட்டெண்:** ____________
(அலுவலக உபயோகத்திற்கு)

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்:- வண/திரு/திருமதி/செல்வி
தமிழில் :-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-
02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்
தமிழில் :-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-
03. தபால் முகவரி
தமிழில் :-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-
04. நிரந்தர முகவரி
தமிழில் :-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-

05. பால்

| ஆண் M | பெண F |
|---|---|
| | |

06. அ) பிறந்த திகதி:-

| வருடம் | மாதம் | திகதி |
|---|---|---|
| வருடங்கள் | மாதம் | நாள்கள் |

ஆ) 2001.08.27 ஆம் திகதியன்று வயது:-

07. இனம்

| | | | |
|---|---|---|---|
| சிங்களவர் | | இந்தியத் தமிழர் | |
| இலங்கைத் தமிழர் | | ஏனையவர்கள் | |
| முஸ்லிம் | | | |

08. நீங்கள் இலங்கைப் பிரஜையா? ..............................
வம்சவழியினாலா / பதிவுசெய்யப்பட்டதனாலா என்பதைக் குறிப்பிடுக. ....................

09. (1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:-
(2) பிரதேச செயலர் பிரிவு:-
(3) வதியும் கால எல்லை:- தொடக்கம்:- வரை:-
(4) வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்திருப்பின், தங்கள் நிரந்தர வதிவு மாவட்டம் :-
(5) தற்காலிகமாக இடம்பெயர்ந்து வதியும் மாவட்டம்:- மாகாணம்:-
இடம்பெயர்ந்த ஆண்டு:- மாதம்:- திகதி:-

10. தெரிவு செய்யும் பரீட்சை நகரஎண்:- ☐
(10 அவது பந்தியில் குறிப்பிட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்)

11. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:- ☐

12. கல்வித் தகைமைகள்:-
12.1) சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சை/க.பொ.த (சா/த) பரீட்சை:-

| ஆண்டு:- | சுட்டெண்:- | ஆண்டு:- | சுட்டெண்:- |
|---|---|---|---|
| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
| 1 | | 1 | |
| 2 | | 2 | |
| 3 | | 3 | |
| 4 | | 4 | |
| 5 | | 5 | |
| 6 | | 6 | |
| 7 | | 7 | |
| 8 | | 8 | |

12.2) க.பொ.த (உ/த) பரீட்சை

| ஆண்டு:- | சுட்டெண்:- |
|---|---|
| பாடங்கள் | தரம் |
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |

13. பணம் செலுத்திய பற்றுச்சீட்டைக் கழறாதவாறு இங்கு ஒட்டவும்.

இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட --------- பிரதேச செயலகத்தின்--------ஆம் இலக்க-------- ஆம் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும், இப் பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கின்றேன் என்றும், எனினும் மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டு பிடிக்கப்பட்டால், பரீட்சையின் முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்தி நிலையை ரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வதற்கும் எனது சம்மதத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

திகதி-------------------- --------------------
விண்ணப்பதாரியின் கையொப்பம்

14. விண்ணப்பப் பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதிவான் சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படை தாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா 74,160/= இற்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவிவகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.

15. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற வண/திரு/திருமதி/ செல்வி-------------------- என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும் ---------------ஆந் திகதி அவர் என்முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி -------------------- --------------------
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப் பெயர்:
பதவி:-
முகவரி:-
(பதவி முத்திரை)
(வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து தற்காலிகமாக வேறு மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்துள்ளவர்கட்கு)
மேற்படி விண்ணப்பதாரி வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தரப் பிறப்பிடமாக/ வதிவிடமாகக் கொண்டவர் என்பதையும் அவர்-------------------- திகதி முதல் தற்காலிகமாக இடம் பெயர்ந்து -------------------- மாகாணத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:- -------------------- --------------------
பிரதேச செயலர்/கிராம சேவகர் கையொப்பம்.

பதவி:-
முகவரி:-
(பதவி முத்திரை)

16. திணைக்களத் தலைவரின் உறுதியுரை:-
இத்திணைக்களத்தின் தற்காலிக/நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் வண/ திரு/திருமதி/செல்வி -------------------- அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கிறேன். அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து விடுவிக்க முடியும் என்பதையும், தனது சேவைக்காலத்தில் எவ்வித ஒழுக்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லை என்றும், சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும், இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:-------------------- --------------------
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பெயரும்.

பதவி:-
முகவரி:-
(பதவி முத்திரை)

## இதய அஞ்சலி

**அமரர் மயில்வாகனம் பரமன்**

உலகத் தத்துவத்தின் உன்னதக் கொள்கையில்
உலகை நீத்து உறங்கிய உறவே!
நினைவினில் இருந்து நீங்காதிருந்தி—எம்
நிலைய்துமாறி துடிக்கின்றோம்! கலங்குகின்றோம்!

26—07—2001 அன்று சிவபதமெய்திய, எமது சக மாணவன் அமுதன் அவர்களின் அன்புத் தந்தையாருக்கு எமது இதய அஞ்சலிகளையும் பிரிவால் துயரில் மூழ்கியுள்ள அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மூன்றாம் வருட மாணவர்கள், (E/g)
பொறியியல் பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
(சி/17620) பேராதனை.


## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூலை 28

நெடுந்தீவு மைகைப்பிரகாச வித்தியாசாலையில் இன்று காலை 9 மணிக்கு சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் எஸ். சத்தியவரதன் தலைமையில் நடைபெறும் இந்தக்குருபூசை நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினர் இதனை ஏற்பாடு செய்துள்ளனர்.

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் அவசர நிர்வாகசபைக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-4)

## தொழில் தகைமையை அளிப்பதற்காக
# பட்டதாரி ஆசிரியர்களுக்கு 3 மாத குறுகியகாலப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 28

பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தொழில் தகைமையை அளிப்பதற்காக மூன்று மாத குறுகியகாலப் பயிற்சி ஒன்றை வழங்குவதற்குத் தேசிய கல்வி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பயிற்சிக்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்களைக் கோரியுள்ளார் கல்வி அமைச்சுச் செயலாளர்.

50 வயதுக்கு மேற்பட்ட கடந்த ஜனவரியில் 20 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த பட்டதாரி ஆசிரியர்கள் இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

நிறுவனசார் இரண்டு ஆண்டு ஆசிரியர் பயிற்சி அல்லது தொலைக்கல்வி மூவாண்டுப் பயிற்சி அல்லது பட்டப் பின்டிப்ளோமா பெற்ற ஆசிரியர்கள் இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறிக்கான மாதிரிப் படிவங்களை வலயக்கல்வி அலுவலகங்களில் பெற்று, கல்விச் சேவைகள் உதவிச் செயலாளருக்கு அனுப்புமாறு கல்வி அமைச்சுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# பலகாலமாக குண்டுங்குழியுமாக காட்சிதரும் நீர்வேலி மடத்தடிவீதி!
## கற்கள் பறித்தும் பயன் கிட்டவில்லை

நீர்வேலி மடத்தடி வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாத நிலையில் குண்டுங்குழியுமாகக்காணப்படுகிறது.

இந்த வீதியைத் திருத்துமாறு சம்பந்தப்பட்டோரிடம் பொதுமக்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்ததை அடுத்து கடந்த வருடம் நடுப்பகுதியில் வீதி திருத்துவதற்குரிய கற்கள் பறிக்கப்பட்டன. ஆனால் இன்னும் திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்

இவ்வீதியால் பயணம் செய்யும் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள், விவசாயிகள், பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன், எதிர்வரும் 23 ஆம் திகதி பிரசித்தி பெற்ற நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாக இருப்பதால் இந்த ஆலயத்துக்கு வரும் பக்தர்களும் பெரும் கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும் என்றும் —

வீதியால் தேர் இழுக்கவும் முடியாத நிலைமையும் ஏற்படும் என்றும் இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-4)


NSB

## தேசிய சேமிப்பு வங்கி
### யாழ்ப்பாணம்

## "ரிதீரேகா" விசேட கருமபீடம்

ஒக்ரோபர் 2001 இல் நடைபெறவிருக்கும் 'ரிதீரேகா' மாபெரும் சீட்டிழுப்பில் முதலாம் பரிசு ரூ. 35 லட்சத்தை இலக்குவைத்து யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கி, நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவகாலத்தில் விசேட கருமபீடம் ஒன்றை அமைத்துள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். இங்கு தாங்கள் விரும்பிய தொகைக்கு ரிதீரேகா சான்றிதழ்களைக் கொள்வனவு செய்ய முடியும். ''ரிதீரேகா'' மற்றெந்த சேமிப்புத்திட்டமும் வழங்காத அனுகூலங்களை உங்களுக்கு வழங்குகிறது.

01. முதலிட்ட பணத்தை இழக்காமல் பரிசுகளை வெல்லும் வாய்ப்பைப் பெறலாம்.
02. பரிசுபெற்ற இலக்கங்கள் அடுத்த சீட்டிழுப்பிலும் நீக்கப்படுவதில்லை என்பதால் ஓர் இலக்கத்தின் பேரில் பல தடவைகள் பரிசுகளை வெல்ல முடியும்.
03. ரிதீரேகா சான்றிதழை வாங்கிய ஒரு வருடத்தின் பின் நீங்கள் விரும்பினால் அதனைப் பணமாக மாற்றிக்கொள்ளலாம். தோல்வியென்ற பேச்சுக்கே இடமில்லை.
04. ஒவ்வொருவரும் தத்தமது வசதிக்கேற்ப முதலீடுசெய்ய முடியுமென்பதால் அதிக பணத்தை முதலீடுசெய்து வெற்றிவாய்ப்பை அதிகரிக்கலாம்.
05. பிறந்தநாள், திருமணம் போன்ற எந்தநிகழ்ச்சிகளுக்கும் எவராலும் வழங்கக்கூடிய அதிஉன்னத பரிசு இதுவே.

எனவே ரிதீரேகாவில் தவறாது ஒவ்வொருவரும் பணத்தை முதலீடு செய்து தங்கள் அதிர்ஷ்டத்தைப் பரிட்சியுங்கள்.

-- தேசிய சேமிப்பு வங்கி உங்கள் குடும்ப வங்கி --

தேசிய சேமிப்பு வங்கி,
யாழ்ப்பாணக் கிளை. (சி/17599) முகாமையாளர்.


## சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்
## (இருபாலை - கோண்டாவில் வீதி, கோண்டாவில்)
# கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் 10 — 08 — 2001 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினமே பிற்பகல் 2-00 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை 'தலைவர், சாவகச்சேரி பிரதேச சபை, இருபாலை — கோண்டாவில் வீதி, கோண்டாவில்' என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டி தெரு, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் எதிர் வரும் 10 — 08 — 2001 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும்.

| வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம். | கேள்விப்பத்திர பணம் | பொருள்கள் சேவைகள் வரி |
|---|---|---|---|
| 01. எருவன் வயல் வீதி, மதகு அமைத்தல் | 2500/- | 250/- | 31.25 |
| 02. கும்பிட்டான் வீதி திருத்தம் (கறுக்காய் கந்தசாமி கோயில் கும்பிட்டான் பிள்ளையார் கோயில் வரை) | 2000/- | 250/- | 31.25 |
| 03. வாணிச்சந்தை வேலி அமைத்தல். | 500/- | 150/- | 18.75 |

மேற்குறிப்பிட்ட மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணத்தையும் மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்பணத்தையும் செலுத்துவதன் பேரில் 08 — 08 — 2001 ஆம் திகதி பிற்பகல் 12-30 மணிவரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இது சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

அன்ரன் பொன்னையா
தலைவர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

சாவகச்சேரி பிரதேச சபை,
இருபாலை -கோண்டாவில் வீதி,
கோண்டாவில். (சி-17588)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 10 — 07 — 1917
இறப்பு 28 — 06 — 2001

**திருமதி சரஸ்வதி கனகசபை**

திதி:- பூர்வபக்க அட்டமி

எங்கள் குடும்ப ஒளிவிளக்காயிருந்து எம்மையெல்லாம்
சீரும் சிறப்புமாக வாழவைத்த அன்புத் தெய்வமே!
ஒரு மாதமென்ன ஆண்டுகள் பல ஓடினும் —
மறப்போமா
உங்கள் நினைவுதனை எம்வாழ்வில்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்!

பிரிவால் துயருறும்:
பேரப்பிள்ளைகள்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (90531)

## துயர் பகிர்கின்றோம்

யா/ கோப்பாய் மகாவித்தியாலய ஆசிரியை
**திருமதி குமுதினி அசோக்குமார்**
அவர்களின் அன்பு அம்மம்மா
**திருமதி சரஸ்வதி கனகசபை**

அவர்கள் 28.06.2001 அன்று காலமாகிவிட்ட செய்தி அறிந்து மிகுந்த மனவேதனை அடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கெடுத்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள்,
யா/ கோப்பாய் மகாவித்தியாலயம்.
(90318)

# இந்த வார இராசி பலன்

## 29 - 7 - 2001 - 4 - 8 - 2001

மகாதேவா ஜோதிடம்

| | | | |
|---|---|---|---|
| | சனி | | வி வெ ரா |
| | | | சூ ▼ புத |
| | இராசிச் சக்கரம் | | |
| கே | செவ் | சந் | |

**மாற்றம்:**
**29 - 7 - 2001 இல் விசாக நட்சத்திரம், துலாம் இராசியில் சந்திரன் நிற்கும்.**

அரசியலில்- அரசியல்வாதிகளிடையேஅபிப்பிராய பேதங்கள். ஏற்பட்டபடி இருக்கும். நெற்கே அபிப்பிராய பேதங்களை எதிர்க்கட்சிகள் உட்பட பலரும் பெரிதுபடுத்தி , விரிவுபடுத்திய படி இருப்பார்கள். சில இடங்களில் மக்கள் இடம்மாறிப் போக நேரிடும். இந்தியா புதிய அழுத்தங்களைக் கொடுக்கும். பாதுகாப்புக்கு மேலும் உதவிகள்செய்யும் இந்தியாவில் வடக்கில் நெருக்கடிகள் தோன்றும் அரசியல்வாதிகளிடையே கருத்து வேற்றுமைகள் ஏற்படும். மேற்குலகம், கிழக்கு, மத்திய கிழக்கு நாடுகளில் தொடர்ந்து பொருளாதார அழுத்தங்களைக் கொடுத்தபடி இருக்கும். பசுபிக், அத்திலாந்திக் சமுத்திரப் பிராந்திய நாடுகளிலும் — இந்துசமுத்திர தென்கிழக்குப் பிராந்திய நாடுகளிலும் இயற்கையின் சீற்றம் விட்டு விட்டுக் கொடுக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

மனிதர்களாகிய எமக்கு அடிக்கடி ஞாபகமறதி வருமாம். அதனால்தான் திரும்பத் திரும்ப இந்தத் திருவிழாக்களைப் பெரியோர்கள் நடத்துகின்றார்கள் எச்சொல்லுவது சரிய எனச் சிந்திக்கின்றீர்கள்போலும். வீடு மனையில் சிறப்பு மாற்றம் ஏற்படும். செலவுகள் கட்டு மீறும். கடன் பளு ஏற்படலாம். சகோதரங்களுக்கான செயற்பாடுகளில் ஈடுபட்டு அவர்களிடமே குறை கேட்பீர்கள். கலைக்காக செலவு செய்வீர்கள். போதை வஸ்துக்களைச் தவிர்ப்பது நன்று. நரம்புத் தளர்ச்சி, தோல் வருத்தம், கடி, வயிற்றுநோ, மலச் சிக்கல் என்பன ஏற்படும். கொம்பியூட்டர், செய்தித்துறை, புடைவை, நகைத் தொழில்கள், பிரயாணத் துறை போன்ற துறைகளில் தொடர்பானவர்களுக்கு அதிக நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.

### இடபம்

ஆட்சிப் பீடத்தவர்களுடன் எதிர்க்கட்சிகள் தாச்சி விளையாடுவது இங்குமட்டுமல்ல. உலகநாடுகள் எங்கும் நடப்பதுதான். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் வரலாம். கவனமாகச் சிரித்துச் சிரித்துச் சமாளியுங்கள். குடும்பத்தவருடன் கருத்து வேற்றுமை வந்தாலும்பொறுமையாக இருக்கவும். தாயா, தாரமா என்ற போட்டிப் பேதலிப்புக்கு சிலர் வித்திட்டு விடுவார்கள். எதிர்ப்பாலாருடன் கவனமாக இருக்கவும். அடிக்கடி களைப்பு, சலவருத்தம், நெஞ்சுவருத்தம் என்பன வரும். இசைத்துறை, அச்சுத்துறை, மருந்துத் துறை போன்ற துறையினர்கள் அதிக நன்மை அடைவார்கள். சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்யுங்கள்-

அதிர்ஷ்ட நாள்;- வெள்ளி.

### மிதுனம்

உலகில் எந்த நாட்டில் உண்மையான ஜனநாயக அரசியல் நடக்கிறது எனச் சிந்திக்கிறீர்களா? தமது தனி இயல்பென எண்ணி சுயநல உந்தலால் சிலர் ஜனநாயகத்திற்கு மாறான செயற்பாடுகளில் இறங்குறார்களோ என எண்ணத் தோன்றுகின்றது. தொழில் ஸ்தானத்தில் புதுமைகள் செய்யமுற்பட்டு நஷ்டமடைவீர்கள். மனப் பயத்தால் பல அலுவல்களைப் பின்போடுவீர்கள். கலகத்தைப் பிறப்பித்து நியாயம் காணமுற்படுவீர்கள். தூரதேச செய்திகளால் பதற்றம் சிலருக்கும் ஏற்படலாம். கொடுக்கல் வாங்கலில் நிதானமாக இருக்கவும். காயங்கள், மலச்சிக்கல், தலையிடி, வாதஉளைவு, களைப்பு என்பன இருக்கும். போக்குவரத்துத்துறை, புடைவைத் துறை, மருந்துத்துறை. வியாபாரத்துறை ஹோட்டல்துறை போன்ற துறையினர் இலாபம் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்:- வியாழன் மத்தியானம்.

### கடகம்

சாதாரணமாகக் காணி, பூமி விஷயத்திலேயே விட்டுக் கொடுக்க மனம் வருவதில்லை. ஒரு நாட்டின் நிலத்தை அரசியல் தலைவர்கள் விட்டுக்கொடுப்பார்களா? தொழில் ஸ்தானத்தில் கலகம் பிறந்து நியாயம் பிறக்கும். அடிக்கடி கோவம் வரும். சகோதரங்களை அல்லது பிள்ளைகளை ஏசுவீர்கள். வீடு, வாகன சுகம் கிடைக்கும். ஆடை, ஆபரணச் செலவுகள் அதிகரிக்கலாம். அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் நிதானமாக இருக்கவும். வயிற்று வருத்தம், தோல் வருத்தம் சல வருத்தம், கைகால் பிடிப்பு என்பனவை வரும், கடற்றுறை, மருந்துத்துறை, செய்தித் துறை, நகைத்துறை போன்ற துறையினர்கள் அதிக இலாபம் அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், சனி.

### சிங்கம்

நிர்வாகம் சமநீதிப்படி தான் நடக்க வேண்டும். எவருக்கும் சலுகைகளைக் காட்டக் கூடாது. தர்மப்படி, சட்டப்படி செயற்பட்டு பல நன்மைகளைச் செய்து கொண்டு இருப்பீர்கள், தெய்வத் தொண்டுகள் தொடரும். கடையில் நிறைவு காண்பீர்கள் தூரதேசச் செய்திகள் நன்மைகள் பொறுக்கும் மேலதிகாரிகளின் உதவிகள், ஆலோசனைகள் கிடைக்கும். நாரிநோ, நெஞ்சுவருத்தம், கண்கூச்சம், காலில்நோ என்பன வர இடமுண்டு. நீர்வாகத்துறை, விவசாயத் துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், சனி.

### கன்னி

கலகலப்பான காலமாகும் மாற்றங்கள்பலதும்மாறிமாறி வருவதனால் மனக்களைப்பு இருக்காது. தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள், மேலதிகாரிகளின் ஆதரவு இருக்கும். இடம்மாற வேண்டிய சூழ்நிலைகள் வரலாம். நண்பர்கள் உதவி செய்வார்கள். பொருள் களவு போக இடம்உண்டு எனவே நிதானமாக இருக்கவும். இடுப்புநோ, கிருமித்தாக்கம், மலச்சிக்கல், வாதப்பிடிப்பு என்பன வரும். பிரயாணத்துறை, வியாபாரத்துறை, ஏற்றுமதி, இறக்குமதித்துறை, தரகுத் துறைபோன்றதுறையினருக்கு மாற்றங்களும் நன்மைகளும் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், வெள்ளி, சனி.

### துலாம்

படித்தவர்களை படியாதவர்கள் முட்டாள்களாக்குவது அனுபவம் என்ற முத்திரையிலாகும். ஆனால் இது எல்லா இடங்களிலும் சரிவர மாட்டாது. உங்கள் தொழில் ஸ்தானத்திலும் சிலர் உங்களை ஏமாற்ற முற்படுவார்கள். பொருள்களில் நிதானமாக இருக்கவும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். சகோதரங்களுக்கு நன்மைகளும், அவர்களிடமிருந்து செய்திகளும் வரஇடமுண்டு. எதிர்ப்பாலாருக்கு உடல் நிலைபாதிப்பு வாலாம். தலைவலி, குடல்வருத்தம், தோல்வருத்தம், வயிற்றுநோ, வாய்வுத்தொல்லை என்பன வரும். இசைத்துறை, வியாபரத்துறை, நகைத்துறை, குருத்துறை போன்ற துறைகளில் தொடர்புடையவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், வெள்ளி, சனி.

### விருச்சிகம்

தமிழ் மக்களின் அறிவு, முன்னேற்றம், பொருளாதார மேம்பாடு கல்விச்செல்வத்திலேயே கூடியளவு தங்கியுள்ளது. தொழில் ஸ்தானத்தில் விட்டுவிட்டு மாற்றங்கள் கொடுக்கும். நண்பர்கள் வருகை மன ஆறுதலைத் தரும். இனஜன உதவிகள் கிடைக்கும். புதியவர்களின் நட்பு கலகலப்பைக் கொடுக்கும். அயலவர்களால் தொல்லைகள் ஏற்படும். மாற்றங்கள் சகஜமாகும். காது வருத்தம், வாய்வு,வாதம், உஷ்ண பீடைகள், நெஞ்சு வருத்தம் என்பன வரும். மருந்துத் துறை, இரும்புத்துறை, பாதுகாப்புத்துறை, சட்டத்துறை போன்ற துறையினருக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், வெள்ளி, சனி.

### தனுசு

பற்றுப் பாசம், சொந்த பந்தம், வாழ்த்துவது போற்றுவது எல்லாம் பொருளாதார அடிப்படையும் ஒருவித கௌரவ எதிர்பார்ப்பும் எனச் சிந்திக்கின்றீர்களா? உண்மைதான். தொழில் ஸ்தானத்தில் உங்கள் உதவி நாடிப் பலர் காத்திருப்பர். தெய்வீக வழிபாடு பல நற்பலன்களைச் சந்ததியினருக்குக் கொடுக்கும். குடும்பத்தில் நன்மைகள் நடக்கும். புதிய பொருள் வரவு ஏற்படும். எதிர்ப்பாலாரின் எதிர்ப்பு இருக்கும். எலும்பு நோ, இடுப்பு வலி, வயிற்று நோ, சளி, வாய்வு எனத் தொல்லைகள் கொடுக்கும். சட்டத்துறை, குருத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், வெள்ளி, சனி.

### மகரம்

அவரவர் கஷ்டப்பட்டோ, போராடியோதான் எதனையும் செயற்படுத்த முடியும். வேறு எவராவது எனக்கு உதவட்டும் எனச் சிந்திப்பதில் அர்த்தமில்லை. எனவே தொழில் ஸ்தானத்தில் உறுதியுடன் செயற்படுங்கள். மாற்றங்கள் மெல்ல மெல்ல வரும். காற்றுள்ளபொழுதே தூற்றிக்கொள்ளல் வேண்டும். மாற்றங்கள் சகஜம். குடும்பத்தினரிடையே அபிப்பிராய பேதங்கள் வரும். அரசியல் பேசி அவதிப்படாதீர்கள் நரம்புவிறைப்பு, மூட்டுவலி, தலைவலி, கைகால் பிடிப்பு என்பன கொடுக்கும், செய்தித்துறை, மருந்துத்துறை, வியாபாரத்துறை, ஆசிரியத் துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்;- வியாழன், வெள்ளி, சனி.

### கும்பம்

கருத்துடன் எதைச் சொன்னாலும் கலகமே ஆகின்றதா? பொறுமையாக இருந்து தொழில் ஸ்தானத்தில் கருமமாற்றுங்கள். இடமாற்றங்கள் நல்லதல்ல. பொறுமையாக இருந்து செயற்பாடுகளைச் செய்வீர்கள்- பெரியவர்கள் உதவுவார்கள். அரசியல் கருத்துக்களை கண்டபடி சொல்லாதிர்கள். சகோதரர்களுக்கோ புத்திரர்களுக்கோ நன்மைகள் நடக்கும். மூட்டு வலி, கால்வருத்தம், தோல் வருத்தம், மறதி, சளி, உஷ்ண பீடைகள் என்பன வரும். குருத்தொழில் விவசாயத் துறை, மருந்துத்துறை, செய்தித்துறைகள் அரசியல் துறைகள் போன்ற துறையைசார்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், சனி.

### மீனம்

காணி பூமி உரிமையை மனிதர்கள் இலகுவில் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். தொழில் ஸ்தானத்தில் கிடைக்கும் சலுகைகளை ஏன் நாம் விட்டுக்கொடுக்க வேண்டும்? எனச்சிந்திப்பதில் தவறில்லை. புத்திசாதுரியமாகச் செயற்பட்டு நன்மைகளை அடைவீர்கள். மாற்றங்கள் சர்வசாதாரணம். நரம்பு விறைப்பு, குடல்வருத்தம், சளித்தொல்லை கைகால் தாக்கம், உணர்ச்சிவசப்படுதல் என்பன ஏற்படும். பிரயாணத்துறை, கடற்துறை. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம், தரகுத்துறை, குருத்துறை, மருந்துத் துறை போன்றதுறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

★ அதிர்ஷ்ட நாள்கள்:- வியாழன், சனி.


## நன்றியுடன் பாராட்டுகிறோம்

மக்களுக்கு அடைக்கலமளித்துக் காத்தருளும் வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் ஸ்ரீகந்த சுவாமி கோயிலின் புனரமைப்புக்கு, நான்கு லட்ச ரூபா நிதி ஒதுக்கீடு செய்துதவியமைக்காக.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரம், இந்துசமய கலாசார அமைச்சரும், ஈ.ம.ஜ. கட்சியின் செயலாளர் நாயகமுமான

மாண்புமிகு அமைச்சர் கௌரவ
**கே. என். டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்

ஈ.ம.ஜ. கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ

**கே. வி. குகேந்திரன் (ஜெகன்)** அவர்களுக்கும்

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரும், ஈ.ம.ஜ.கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும், வலி.மேற்கு பிரதேச இந்துமகாசபையின் போஷகரும் ஈ.ம.ஜ.கட்சியின் இந்து சமய விவகார பொறுப்பாளருமாகிய

**திரு. ந. திரிலோகநாதன் (லோகன்)**
அவர்களுக்கும்

வலி. மேற்கு பிரதேச சபை உபதலைவர்
**திரு. வே. மகேந்திரன் (வள்ளுவன்)** அவர்களுக்கும்

எமது மனமார்ந்த நன்றிகளும் பாராட்டுகளும் உரித்தாகட்டும்.

- பரிபாலனசபை

அடைக்கலம்தோட்டம்,
வட்டுக்கோட்டை.

(90501)



## துயர் பகிர்கின்றோம்

பிரம்மஸ்ரீ
**கார்த்திகேயஐயர் குகதாசசர்மா**
[சின்னராசு ஐயா]

18-07-2001 புதன்கிழமை சிவபதம் அடைந்த தீர்வேலி மாசிவன் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய பிரதம அர்ச்சகரும், ஓய்வுபெற்ற அரசகட்டட (P. W. D) மேற்பார்வையாளருமாகிய

**பிரம்மஸ்ரீ கார்த்திகேயஐயர் குகதாசசர்மா**

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தி. கிருஷ்ணமூர்த்திக்குருக்கள் குடும்பம்.**
[ஆசிரியர்]

கல்வயல் ஐயனார் ஆலயம்,
சாவகச்சேரி.

(90505)

## கேள்விப்பத்திர அறிவித்தல்
### வலயக் கல்வித் திணைக்களம், வடமராட்சி

இதன் கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளரும், கேள்விச் சபைத்தலைவருமான என்னால் 2001.08.09ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்றைய தினமே மு.ப.10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விக்காரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல | பாடசாலைப்பெயரும் வேலைவிவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்புப்பணம். |
|---|---|---|---|
| 01. | யா/விக்னேஸ்வராக் கல்லூரி 90'X25' மூன்றுமாடிக்கட்டட (மிகுதிவேலை) முதலாம் கட்டம் - கீழ்மாடி. | 400/- | 5500/- |
| 02 | யா/விக்னேஸ்வராக் கல்லூரி 90'X25' மூன்றுமாடிக்கட்டட (மிகுதிவேலை) இரண்டாம் கட்டம் - முதலாம்மாடி | 400/- | 5500/- |

01. மேற்படி இரு வேலைகளுக்கும் இக்ராட் (ஐசீரீஏடி) நிறுவனத்தின் தரம் 09உம் அதற்கு மேற்பட்டவர்களும் விண்ணப்பிக்கத் தகுதிபெற்றவர்களாவர்.
02. கேள்விப் பத்திரங்களில் பொருள்கள் சேவை வரி (ஜீஎஸ்ரி) சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பொருள்கள் சேவை சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
03. வேலைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட கேள்விப் பணத்தை வடமராட்சி வலய கல்வித்திணைக்களத்தின், வங்கிக்கணக்கில் வைப்புச்செய்து கேள்விப்பத்திரங்களை 01-08-2001ஆம் திகதியிலிருந்து 03-08-2001ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வடமராட்சி வலயகல்வித்திணைக்கள பாடசாலைகள் கட்டடவேலைகள் கிளையில் கட்டடப்பரிசோதகரிடம் பெற்றுக்கொள்ளலாம்.
04. விண்ணப்பங்கள் யாவும் இருபிரதிகளில் பூர்த்திசெய்யப்பட்டு, மூலப்பிரதியும் இணைப்பிரதியும் தனித்தனியே இரு கடிதஉறைகளில் இடப்பட்டு, கடிதஉறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடிதஉறைகளில் போடப்பட்ட இருபிரதிகளையும் பிறிதோரு கடித உறையில் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு, 'தலைவர், கேள்விச்சபை, வலயக் கல்வித்திணைக்களம், வடமராட்சி' என விலாசமிட்டு, வலயக்கல்விப்பணிப்பாளரின் அலுவலக அறையில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் 2001.08.09அம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறித்த கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
05. தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தகாரர், தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து 04மாத காலத்திற்குள் வேலையைப் பூர்த்திசெய்து கையளித்தல் வேண்டும். எவ்வித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் உள்ள கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன், மேலதிக விவரங்களை பாடசாலைகள் கட்டட வேலைகள் பரிசோதகரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

*பாடசாலைகள் கட்டடவேலைகள் கிளை,* சி.சிவராசா
*வலயக்கல்வித் திணைக்களம், வடமராட்சி.* *வலய கல்விப் பணிப்பாளர், வடமராட்சி.*

C/17598



## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்
## மீள்கேள்வி அறிவித்தல் - 2001

2000-12-03ஆம் திகதிய உதயன், வலம்புரி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் மாட்டிறைச்சிக் கடைகள் 2001-08-15ஆம் திகதி தொடக்கம் 2001-12-31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு கொடுப்பனவுக்காக கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி :- 09-08-2001 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி :- 13-08-2001 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 13-08-2001 பிற்பகல் 2.00 மணி

அட்டவணை:-

| உபஅலுவலகம் | குத்தகையின் தன்மை | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள் விப்பத்திரப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடியஆகக்குறைந்த தொகை |
|---|---|---|---|---|
| 1. மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | மாட்டிறைச்சிக் கடை, மானிப் பாய் பொதுச் சந்தை | 1500/- | 300/- | 50,000/- |
| 2. பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் | மாசியப்பிட்டி பொதுச்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1500/- | 300/- | 5,000/- |

(வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், ஜே.பி.யு.எம்)
தலைவர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

*வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,*
*தலைமைச்செயலகம், மானிப்பாய்.*

(C/17596)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும், இராமநாதன் நுண்கலைப்பீட நடனத்துறை தலைவருமான*

### கலாநிதி சபா ஜெயராசா
**அவர்கள்**

**பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றமையயிட்டு, அவர் பல்லாண்டு காலம சீரும் சிறப்பும் புகழும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.**

**நீவிர் வாழிய வாழிய வாழியவே!**

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்.
*(உடுவில் கிளை)*

K.சிவாஜி
*தலைவர்*
*அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.*

ச.சர்வேஸ்வரன்
*செயலாளர்*
*அதிபர், யா/உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்.*

ஆ.சிவஞானசுந்தரம்
*உப தலைவர்*
*அதிபர், யா/இராமநாதன் கல்லூரி.*

வி.பரஞ்சோதி
*உபசெயலாளர்*
*யா/இணுவில் மத்திய கல்லூரி.*

(90444)


## முன்பள்ளி விளையாட்டு

வலி.வடக்கு,ஜுலை28

சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையம் நடத்தும் சிவன் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் .1.00 மணிக்கு நிலைய மைதானத்தில் தலைவர் கருணைநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வலி.தெற்கு பிரதேச சபைத்தலைவர் க.கமலசேகரன் பிரதம விருந்தினராகவும், கௌரவ விருந்தினர்களாக வலி. தெற்கு பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா, வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவனேசன், சர்வோதய பிரதேச இணைப்பாளர் எஸ்.சங்கரப்பிள்ளை உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ம-86)


## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**கிழக்குப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் சங்கீத கலைமாணி (B.Music), நடனக் கலைமாணி (B.Dance) ஆகிய பட்டப்படிப்பு நெறிக்கான மாணவர் அனுமதி**

சுவாமி விபுலானந்தா இசை, நடனக் கல்லூரி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழகம் சங்கீத கலைமாணி **(B.Music),** நடனக் கலைமாணி **(B.Dance)** ஆகிய பட்டப்படிப்பு நெறிகளை ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**விண்ணப்பிக்கத் தேவையான தகைமைகள்:-**
விண்ணப்பிப்போர் சுவாமி விபுலானந்தா இசை, நடனக் கல்லூரியில் சங்கீதம் அல்லது நடனம் ஆகிய துறையில் டிப்ளோமாப்பட்டம் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

**பாடநெறிக்கான கால எல்லை:** மூன்று வருடம்

**விண்ணப்ப முடிவுதிகதி:-** 25.08.2001

மேலதிக விவரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கும் நிதியாளர், கிழக்குப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு எடுக்கப்பட்ட 50/- பெறுமதியான செங்கலடி தபால் அலுவலகத்தில் மாற்றக்கூடிய காசுக்கட்டளையை 9" X 6" அளவுடைய ரூபா 3.50 முத்திரை ஒட்டப்பட்டு, சுய விலாசமிடப்பட்ட கடித உறையையும் இணைத்து *உதவிப்பதிவாளர், பரீட்சைகள் கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, வந்தாறுமூலை. செங்கலடி* எனும் விலாசத்துக்கு 25.08.2001க்கு முன் அனுப்பி வைக்கவும்.

இது தொடர்பான விவரங்களையும், ஆவணங்களையும் கிழக்குப் பல்கலைக்கழகப் பரீட்சைகள் பகுதியிலும், சுவாமி விபுலானந்தா இசை, நடனக் கல்லூரியிலும் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை,
செங்கலடி,
இலங்கை.

**- பதில் பதிவாளர்.**

(C/17579)



## தச்சுத் தொழிலாளர் தேவை

அனுபவம் வாய்ந்த தச்சுத் தொழிலாளர் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். தகுதியுடையோர் கீழ்வரும் முகவரியில் உடன் தொடர்புகொள்ளவும்.

**866, பருத்தித்துறை வீதி,**
நல்லூர் (சங்கிலியன் வளைவுக்கு அருகில்)

(90506)



## மரண அறிவித்தல்

### நடராசா கௌசிகா

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கௌசிகா 26-07-2001 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் வள்ளியம்மை அவர்களின் அன்பு மகளும், சஜீந்திரா (பிரான்ஸ்), லகுதாசன் (ஜேர்மனி), பிரதீபன் (கனடா), நிகேதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், ரவிச்சந்திரன் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மைத்துனியும், அர்ச்சனாவின் (பிரான்ஸ்) அன்புச் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29-07-2001) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்குப் பொரளையில் நடைபெற்றுப் பூதவுடல் மாலை 4 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*A.Arumugam*
*30A, Kreeda Mawata,*
*Sri Saranankara Rd.,*
*Kalubowala, Dehiwala.*
*T.P. 01-761209*

தகவல்:
ச.நந்தகுமார் *(மைத்துனர்)*
*சங்கரப்பிள்ளை வீதி,*
*ஆனைக்கோட்டை.*

(90522)

# அரசமைப்பைத் தயாரிக்கும் குழுவை நியமிப்பதிலும் இழுபறி நிலை!

கொழும்பு,ஜுலை28

புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் குழுவை நியமிப்பதிலும் கூட அரசுக்குள் இழுபறி நிலவுவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவியேற்ற பின்னர் அரசமைப்பு விவகார அமைச்சர் பதவியை வகித்து வரும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸே அரசமைப்பைத் தயாரிக்கும குழுவின் தலைவராக இருந்து வந்தார்.

தற்சமயம் உருவாக்க உத்தேசிக்கும் புதிய அரசமைப்புத் திட்டத்தைத் தயாரிக்கும் குழுவின் தலைவர் பதவியை அவருக்கு வழங்கத் தலைமைப் பதவிகளில் உள்ள சிலர் முன்வராததை அடுத்தே இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த விவகாரத்தில் சுமுகநிலை ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் அமைச்சர்களான மங்கள சமரவீரவும் மகிந்த ராஜபக்ஷவும் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க-3)

# உல்லாசப் பயணத்துறையில் திடீரெனப் பெரும் வீழ்ச்சி!

## சபையின் தலைவர் அறிவிப்பு

கொழும்பு,ஜுலை28

கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான தாக்குதலை அடுத்து உல்லாசப் பயணத்துறை பெருவீழ்ச்சி அடைந்துள்ளது என்று உல்லாசப் பயணத்துறைச் சபைத் தலைவர் சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்துள்ள உல்லாசப் பயணத்துறையை பழைய நிலைக்குக் கொண்டுவர முயற்சிகள் எடுத்துள்ளோம். ஆனால் உடனடியாக அதற்குச் சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் அவர் சொன்னார்.

இவ்வாண்டு ஆரம்பத்தில் இருநது பெரும் எண்ணிக்கையான பயணிகள் மேற்கு நாடுகளில் இருந்து இங்கு வந்த வண்ணம் இருந்தனர். கட்டுநாயக்கா தாக்குதலை அடுத்து நிலைமை மோசமாகி விடும் போல் தோன்றுகிறது என்றார் அவர்.

### அரசமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்பில் மலையக மக்கள் பாதிக்காத வகையில் ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்று ஜனாதிபதி அப்போது பதில் அளித்ததாகவும் -

புதிய அரசமைப்பின் நகலை எதிர்வரும் திங்கட்கிழமை பார்வைக்கு தருவதாக அவர் உறுதி அளித்ததாகவும் - தொண்டமான் தெரிவித்தார். (க-3)

### எதிரணி........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதிய அவகாசம் தரப்படாததால் ஜனாதிபதியின் தரப்பினால் குறிக்கப்பட்ட தினமான நேற்று ஜனாதிபதியைத் தங்களால் சந்திக்க முடியவில்லை என்றும் -

பின்னர் ஒரு திகதியில் சந்திக்கலாம் என்றும் -

ஜே.வி.பி. ஜனாதிபதிக்கு நேற்று அறிவித்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று இருந்தது. ஆனால் அவசர கோலத்தில் ஜனாதிபதியைச் சந்திக்க முடியாது என்றும், அடுத்த மாதம் 6 ஆம் திகதிக்குப் பின்னர் சந்திக்க முடியும் என்றும் கூட்டணியின் சிரேஷ்ட உப-தலைவர் வீ.ஆனந்தசங்கரி நேற்று ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தார்.

மலையக மக்கள் முன்னணியோ தமது கட்சி ஜனாதிபதியைச் சந்திக்க விரும்பவில்லை என்று ஜனாதிபதி அலுவலகத்துக்கு நேற்று அறிவித்தது.

இந்த நிலையில் எதிரணியினரைச சந்தித்துப் பேசுவதற்குப் தாம் விடுத்த அழைப்புக்களை, ரத்துச் செய்த ஜனாதிபதி, அவர்களைச் சந்திக்கும் திட்டத்தைத் தற்போது கைவிட்டு விட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-3-4)

## நல்லூரில் இன்று

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று அதிகாலை ஐந்து மணிக்கு திருமுறை வீதிப் பஜனையும் அதைத் தொடர்ந்து காலை 8 மணியளவில் குருமூர்த்த ஆலயத்தில் விசேட பூசை தீபாராதனை வழிபாடுகளின் பின்னர் 'கந்தபுராணம்' புராணபடன நிகழ்வு இடம்பெறும்.

★ ★ ★

இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6 மணி முதல் 7.15 மணி வரை இடம்பெறும் தெய்வீக இசையரங்கில் இன்று வடிவாம்பிகையின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும். (க-17-86)

★ ★ ★

கம்பன் கோட்டத்தில் தினமும் மாலை 6 மணி முதல் 7 மணிவரை அகில இலங்கை கம்பன் கழகம் நடத்திவரும் சமயச் சொற்பொழிவுத் தொடரில் இன்று செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல் கந்தபுராணச் சொற்பொழிவை நிகழ்ததவுள்ளார். (க-4-86-17)

### மணலாறில்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் நான்கு உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும் ஐந்து பேர் காயமடைந்தனர் என்றும் தகவல் நிலையம் மேலும் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வெலிஓயாவுக்கு மேற்கே ரணவைரவில் ரோந்து சென்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த மோதல் சம்பவம் ஒன்றில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாகவும் ஆறு படையினர் காயம் அடைந்ததாகவும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

இதேவேளை -

மணலாறு மண்கிண்டிமலை முகாமுக்கும் அக்கரைவெளி முகாமுக்கும் இடையிலுள்ள இராணுவ காவலரண்கள் மீது நேற்று அதிகாலை 2.30 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டதாக 'புலிகளின் குரல்' வானொலி மூலம் அறிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலின் போது படையினரின் 10 காவலரண்கள் முற்றாக அழிக்கப்பட்டதாகவும் -

இதனால் படையினருக்கு பெருமளவான இழப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் புலிகளின் குரல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (க-3-4)

## போராட்டம் கைவிடப்பட்டது

யாழ்.மாநகரசபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பிக்கவிருந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாகக் கைவிட்டுள்ளனர்.

சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கும் யாழ்மேயர் என்ரவிராஜுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இந்த அறிவிப்பு வெளியாகியது. (க-3-10)

## கூட்டணியின் கருத்தரங்கு

இன்றைய அரசியல் நிலைமை குறித்து விளக்கமளிக்கும் கருத்தரங்கு ஒன்று நாளை காலை 10 மணிக்கு யாழ்.நகரில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா, யாழ. நகர மேயர் என்.ரவிராஜ் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.(க-3)




'ரிதிரேகா' மாபெரும் சீட்டிழுப்பில் முதலாம் பரிசான 35 லட்சம் ருபாவை இலக்கு வைத்து, யாழ்.தேசிய சேமிப்பு வங்கி நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவத்தை ஒட்டி விசேட கருமபீடம் ஒன்றை நல்லூரில் அமைத்துள்ளது. இந்தக் கருமபீடத்தை யாழ்.மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் மங்களவிளக்கேற்றி ரிதிரேகா விற்பனையை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# எலி பொறிக்குள் சிக்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ரேட்', 'கமிஷன்' வேறு. இவை இல்லாமல் எதுவுமே நடைபெறாது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரசின் பிரதிநிதியாக யாழ்ப்பாணத்தில் இருந்துகொண்டு கப்பலுக்கும் விமானத்துக்கும் பிரயாணச் சீட்டுக்களை விற்பனை செய்துகொண்டிருககிறார்.

### எமக்கு நிதி ஏதும் கிடைப்பதில்லை

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் எமக்கு ஒதுக்கப்பட்ட நிதி வழங்கப்படுவதில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பிக்கள் மூவர், ஐ.தே.கட்சி எம்.பி. ஒருவர், தமிழ்க் காங்கிரஸ் எம்.பி. ஒருவர் என ஐந்து பேர் எதிரணியில் இருக்கின்றோம். ஈ.பி.டி.பி. தரப்பில் ஆக நால்வரே உள்ளனர்.

நிதிஒதுக்கீடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது ஈ.பி.டி.பி. முகாமிலே நடத்துகின்றார். அதனால் நாம் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாத நிலை. அதை டக்ளஸ் தேவானந்தாவின் சகாக்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி எங்களுடைய நிதியையும் தம்மிஷ்டம் போல் பங்குபோட்டுச் செயற்படுகின்றனர்.

### சூறையாடப்படும் அரசின் நிதி!

அபிவிருத்தி என்ற பெயரில் அரச நிதி சூறையாடப்படுகின்றது. வழமையான 'ரென்டர்' முறை கடைப்பிடிக்கப்படுவதில்லை. அமைச்சரின் ஆதரவாளர்களுக்கும் கட்சிக்கு உதவி செய்தவர்களுக்கும் 'கொந்தராத்துக்கள்' வழங்கப்படுகின்றன.

தென்மராட்சியில் எண்பது வீதமானோர் வீடிழந்து அகதிகளாகி இருக்கின்றனர். அனைத்து வீடுகளும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு வீடுகட்டிக்கொடுக்க அமைச்சர் மறுக்கின்றார். அதேவேளை தீவுப் பகுதிக்கு பாலம் அமைக்கின்றார்; உல்லாச வீடுதிகளைக் கட்டுகின்றார். தீவுகளில் ஒரு சில ஆயிரம் பேரே உள்ளனர். ஆனால் இங்கு தான் ஈ.பி.டி.பிக்கு 17 ஆயிரம் வாககுகள் கிடைத்தன.

யாழ்ப்பாணத்தை முழுமையாக விடுவித்துவிட்டோம் என்கிறது அரசாங்கம். தற்பொழுது அங்கு வாழும் மக்களுக்கு இராணுவ அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன; ஒவ்வொரு வீட்டிலும் குடும்ப படம் 'பிரேம்' போட்டு மாட்டப்பட்டுள்ளது. தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இராணுவத்தால் நன்கு விசாரணை செய்யப்பட்ட பின்னரே இவை அனைத்தும் வழங்கப்படுகின்றன.

### யாழ்ப்பாணத்துக்கு வேறு சட்டமா?

இப்பொழுது அவசரகாலச் சட்டம் நாட்டின் எந்தப் பகுதியிலும் நடைமுறையில் இல்லை. ஆயினும் யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்கள் வீட்டை விட்டு வெளியிடங்களுக்குச் சென்று வர அனுமதி வழங்க மறுக்கப்படுகின்றது. இது ஏன்?

யாழ்.மக்கள் தமது அன்றாட, அத்தியாவசிய தேவைகள் அனைத்துக்கும் கொழும்புக்கே வரவேண்டியுள்ளது. பிரயாண அனுமதி பெறுவதில் பெரும் கெடுபிடி.

வெளிநாடுகளில் இருக்கும் தமது பிள்ளைகளுடன் தொலைபேசியில் பேசுவதற்கும், வங்கிகளில் பணம் பெறுவதற்கும், உயர்கல்வி பெறுவதற்கும் என வடக்கில் இருந்து வந்த சுமார் 60 ஆயிரம் பேர் கொழும்பில் 'லொட்ஜ்'களிலும் நண்பர்களின் வீடுகளிலும் தங்கியிருக்கின்றனர். திரும்பிச் செல்ல 'பாஸ்' பெறமுடியாமல் அவர்கள் தவிக்கின்றனர்.

வடக்கில் முன்பு அரசாங்கம் 'பாஸ்' விநியோகம் செய்தபோது ஆகக் குறைந்தது பத்து நாள்களுக்குள் 'பாஸ்' பெறமுடிந்தது. ஆனால் இப்பொழுது 'பாஸ்' விநியோகம் ஈ.பி.டி.பியினரின் கையில் இருப்பதால் ஒரு மாதம், இரண்டு மாதம் என்று காத்திருக்க வேண்டியுள்ளது.

ஏழு வருடங்களின் பின் தனது பெற்றோரைப் பார்க்க நண்பர் ஒருவர் லண்டனில் இருந்து குடும்பத்தோடு இங்கு வந்தார். நாடாளுமன்ற உறுப்பினரான நான் அவருக்கு 'பாஸ்' வழங்கும்படி கேட்டேன். அந்த நண்பர் குடும்பத்தோடு யாழ்ப்பாணம் செல்ல அனுமதி வழங்க மறுத்துவிட்டனர். ஆனால் அந்த நண்பர் 40 ஆயிரம் ரூபா லஞ்சம் கொடுத்து யாழ்ப்பாணம் சென்று வந்துவிட்டார். இவ்விடயத்தைப் பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளர் ரணதுங்கவிடம் முறைப்பாடு செய்துள்ளேன். அவர் உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருக்கின்றார்.

### உடலை யாழ்..எடுத்துச் செல்ல 20 ஆயிரம் ரூபா

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முந்நூறு பேர் சிகிச்சை பெறுகின்றனர். அங்கே சிகிச்சை பெறுகின்றவர்களில் சுமார் 20 வீதமானவர்கள் இறந்துவிடுகின்றனர். இறந்தவர்களின் சடலங்களை விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுசெல்வதற்கு 20 ஆயிரம் ரூபா அறவிடுகின்றனர். ஒரு பிரயாணிக்கு உரிய கட்டணம் மூவாயிரத்து ஐந்நூறு ரூபா மட்டுமே. சடலத்தை கொண்டுசெல்வதற்கு முன்னர் அவர்களால் குறிப்பிடப்படும் ஒரு மலர்ச்சாலையில் சடலத்தை பரிசோதனைக்கு உட்படுத்தச் சொல்கிறார்கள். சடலத்தில் குண்டுகள் ஏதும் இல்லை என உறுதிப்படுத்திக்கொள்வதற்கே இந்தப் பரிசோதனையாம். இதற்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபா செலுத்தவேண்டும். மொத்தம் இருபத்தையாயிரத்து ஐந்நூறு ரூபா செல விட்டாலும்கூட உடனடியாகக் காரியம் நடக்காது. ஐந்து, ஆறு நாள்கள் இழுபடவேண்டும்.

### கப்பல் பயணிகளிடம் பணம் உறிஞ்சப்படுகிறது

கப்பலில் செல்லும் பிரயாணிகளிடமும் பணம் உறிஞ்சப்படுகிறது. புலிகளும் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவும் பிரயாண முகவர்களும் செய்துகொண்ட ஜெனிவா ஒப்பந்தத்தின்படி கப்பல் கட்டணமாக அறுநூறு ரூபாவுக்கு மேல் அறவிடமுடியாது. ஆனால் இப்பொழுது 1,575 ரூபாவுக்கு மேல் அறிவிடுகின்றனர். இவற்றையெல்லாம் தட்டிக்கேட்கமுடியாது. எவராவது தட்டிக்கேட்க முற்பட்டால் அதன் பின் விளைவுகள் பாரதூரமானவையாகவே இருக்கின்றன. அதனால் யாழ்ப்பாண மக்கள் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர்.

ஈ.பி.டி.பியினரின் கெடுபிடிகள் ஒருபுறம். இராணுத்தின் அட்டகாசம் மறுபுறம். இவற்றை இப்போது வெளிப்படுத்த வாய்ப்பில்லை.

யாழ்.மக்களின் அவலங்களை முன்பு நாடாளுமன்றத்தில் பகிரங்கப் படுத்தினோம். இப்போது நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டுவிட்டது. இதனால் எமது மக்களின் துன்ப நிலை மூடி மறைக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் யாழ்.செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அப்படியே அனுமதி வழங்கினாலும் மெய்ப் பாதுகாவலர்களை அழைத்துச் செல்லமுடியாது.

### எந்த வேளையிலும் டக்ளஸ் சகாக்கள் யாழ்.செல்லலாம்

அதேவேளை டக்ளஸ் தேவானந்தாவும் அவரது சகாக்களும் ஒன்பது மெய்ப்பாதுகாவலர்களுடன் எந்த நேரத்திலும் யாழ்ப்பாணத்துக்குச் செல்லமுடியும். இதனால் யாழ். மக்கள் அரசின் மீதும் நாடாளுமன்றத்தின் மீதும் நம்பிக்கை இழந்துவிட்டனர்.

சகல விடயங்களையும் ஈ.பி.டி.பியினரின் மூலமே செய்துகொள்ள வேண்டும் என்ற நிலை மாற வேண்டும். ஒவ்வொரு விடயத்திற்கும் அரச அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். நிர்வாகத்தில் அரசியல் தலையீடுகளுக்கு இடமளிக்கக்கூடாது என்பதே எமது கோரிக்கை.

வடக்கு - கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். ஜனாதிபதியும் ஒரு பெண்தான். ஆனால் அவர் இவ்விடயம் பற்றி அலட்டிக்கொள்ளாமல் மௌனமாக இருக்கின்றார். இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது - இப்படி மகேஸ்வரன் எம்.பி.கூறினார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் ஐ.தே.க. எம்.பிக்களான கருணாசேன கொடித்துவக்கு, டாக்டர் ஜயலத் ஜயவர்தன ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ)

நவீன கணனிகள்
மலிவு விற்பனை
மேலும் புதிய நவீன கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள் கொழும்பில் இருந்து வந்து சேர்ந்துள்ளன.
கணனிகளுக்கு எம்மிடம் முன்பதிவு செய்து கொண்டோர் உடனடியாக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
சுவர்ச்சிகரமான விலைக்கழிவில், உத்தரவாதத்துடன் கணனிகளை நீங்கள் கொள்வனவுசெய்ய நாடவேண்டிய ஓரேஇடம்.
IIS கணனிக் காட்சியறை
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(C/17591)

ஈசன் கல்வி நிலையம்
பௌதிகவியல்
A/L2002
வெப்பவியல்
MON.:-6.30 a.m., FRI.:-4.30 p.m.
A/L 2003
ஒளியியல்
MON., TUE.:-3.30 p.m.
திரு.குமரன் (B.Sc.)
(90475)
ஆரம்பம்:- 30-07-2001(MON) 6:30 a.m.

UNIVAC
College of Computer Information Technology
1999, 2000, 2001ஆம் கல்வியாண்டுகளில் எமது நிறுவனத்தில் கல்வி கற்ற மாணவர்களும், பாடசாலைகளினூடாக Basic Programming கற்கை நெறியில் பயிற்சி பெற்ற அனைத்து மாணவர்களும், 05-08-01ஆம் திகதி எமது நிறுவனத்துக்கு சமுகமளிக்கவும்.
Director.
(90482)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.